

# மறை ஞானப்பேழை

சத்தியம் வந்துவிட்டது !

அசத்தியம் அழிந்து விட்டது !

நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !

**August 2024 ஆகஸ்ட் 2024**

Retail Selling Price 25

Volume - 16, Issue - 6

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)




சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

ஜமாலிய்யா அஸ்ஸையித்

யாஸீன் மௌலானா (ரலி)

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

---

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **300/-** |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. **3000 /-** |

---

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

---

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**

அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**

கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**

கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**

J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**

R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**

ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


துல்ஹஜ் - முஹர்ரம்

**ஆகஸ்ட் 2024**

**Volume - 16 Issue -6**


## பேழைக்குள்......


ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்
திருமறைப் பக்கம்.
அமுத மொழிகள்.
உமர் (ரலி) புராணம் – நயம்.
புகாரீஷரீப் மஜ்லிஸ் தொடக்க விழா
அறபு இலக்கிய வளர்ச்சி
மதுரமாமின்ப மதுராபுரி
பாடல் பெற்ற திருத்தலம்
வஹ்ஹாபியர் பொய்யர்
இராமநாதபுரம் மாவட்டமும் இந்து முஸ்லிம் ஒற்றுமையும்
காத்தம் நபியே கல்கி அவதாரம்
சற்குரு சரித்திரம்
பல்லக்குத் தம்பி வலீ
சரணடைய நாடுகிறேன்
மற்றும் விழாக்கள்......

# இரண்டை விடு! ஒன்றில் ஒன்று!

தினமும் ஆயிரக்கணக்கான பொருள்களைப் பார்க்கிறோம்.

காணும் பொருள்களின் எதார்த்தம் புரிந்தால்தான் அதன் உயர்வை – தாழ்வை – தரத்தை – அறிந்து கொள்ள முடியும்.

தினமும் நூற்றுக் கணக்கான விஷயங்களைப் படிக்கிறோம். அதை எடை போட்டுப்பார்க்க – பிரிக்கத் தெரிந்தால்தான் ஒவ்வொன்றின் உண்மையை உணரமுடியும்.

பல்வேறு மனிதர்களிடம் பழகுகின்றோம், அவர்களின் தன்மைகளை அறிந்தால் தான் நல்லவர் யார்? மிக நல்லவர்கள் யார்? பழகத் தகாதவர்கள் யார் என்பதையெல்லாம் புரிந்து கொள்ள முடியும்.

அதேபோல மார்க்க விஷயங்களில் – ஞான விஷயங்களில் – பல அறிவுகள், அறிவுரைகள் நம்மை வந்தடைகின்றன.

அவற்றின் தரம் அறிந்தால்தான் அதிலிருந்து முழுப்பயனை அடைய முடியும்.

ஸூபிஸப் பாதையில் பல ஷைகுமார்கள் – இறைவனை அறிய– அடையப்– பாதை காட்டுகின்றனர். அவற்றை ஞானவழி நடக்க ஆர்வமுள்ள சீதேவிகள் ஆவலாய்ப் பின்பற்றுகின்றனர்.

இவற்றில் குத்புஸ்ஸமானாகத் தோன்றி வழிகாட்டிய, நமது அருமை செய்குநாயகம் குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய்யி நாயகம் அவர்கள், ஸூபிஸப் பாதையின் மெய்ஞ்ஞான இமயமாகவே விளங்குகின்றார்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. அதை அவர்களின் போதனைகளிலிருந்து உணர முடியும்.

உதாரணமாக, அவர்கள் வலியுறுத்தும் வஹ்தத்துல் உஜூதை உணர்ந்து கொண்டவர்கள் இஸ்லாத்தின் ஒவ்வோர் அம்சத்திலும் உயர் தெளிவு உடையவர்களாகவே விளங்குவார்கள்.

மேலும் உதாரணமாக, இறையச்சம் என்ற ஒன்றை எடுத்துக் கொண்டால், பிற செய்கிடம் போதனை பெற்றவர்கள் அல்லாஹ்வை ஓரிடத்திலும் அவர்கள் ஓரிடத்திலுமாக எண்ணி, அல்லாஹ்வையும் தன்னையும் வேறுவேறாக வைத்துத்தான் அஞ்சுவார்கள். இதுபோலவே இஸ்லாத்தின் ஒவ்வோர் அம்சத்திலும் துவிதத்துடன்தான் எண்ணுவார்கள், வணங்குவார்கள், வாழ்வார்கள்.

ஆனால், சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களின் ஞானத்தை உள்வாங்கியவர்கள் அத்வைத உணர்வில் அல்லாஹ்வை அஞ்சுவார்கள். பூரணமாய்க் கண்டு பூரண இறையச்சம் பூண்டு வாழ்வார்கள். எண்ணத்திலேயே ஃபனா நிலையை அடைவார்கள்.

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**
**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்**
**ஜமாலிய்யா**
**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**
**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



தவ்ஹீதை நீங்கள் பூரணமாக விளங்கிக் கொள்ளக்கூடிய அறிவையும், ஆற்றலையும் பரிபூரணத்தின் எல்லா சக்தியையும் இன்பத்தையும் குறையற ஏக இறை நல்குமாக! உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் ஆரோக்கியமான வாழ்வும் நீடித்த ஆயுளையும் வழங்குமாக!

*– மனிதா – நூலில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

நம் தந்தை நாயகம் அவர்களை அநேகர் பின்பற்றினர். இவர்கள் ஒவ்வொருவரும் தாம் அறிந்த வகையில் ஒவ்வொரு விதமாகப் பின்பற்றினர். சிலர் அறிஞர் என்ற வகையில் அறிவைப் பெறுவதில் பின்பற்றினர். சிலர் மார்க்கத்தில் சிறந்த மேதை என்ற முறையில் சட்டங்களைக் கேட்பதில் பின்பற்றினர். வேறு சிலர் சிறந்த பேச்சாளர் என்ற முறையில் பேசும் வகையில் அவர்களைப் பிரதி பண்ணி அதிற் பின்பற்றினர். இன்னும் சிலர் ஸெய்யித் என்ற முறையில் அவர்களின் நடை உடைகளைப் பின்பற்றினர். சிலர் செய்க் என்ற முறையில் முரீத் பெறுவதில் மாத்திரம் பின்பற்றினர். சிலர் குடும்பத்தின் விலாயத்தை எண்ணி அவர்களுக்கும் விலாயத் உண்டு என்ற மாத்திரத்தில் சிறிது அச்சத்துடன் பின்பற்றினர். சிலர் விலாயத்துக்காக (உலகத்தின் நன்மைகளைப் பெற) செய்குல் காமில் என்ற முறையில் பின்பற்றினர். இவர்கள் நித்திய ஜீவனான ஹக்கை அடைவதில் பின்பற்றவில்லை. ஆனால் ஒரே ஒரு கூட்டத்தார் மட்டுமே அவர்களை அவர்களின் குத்பிய்யத்தின் மேன்மையை அறிந்து பின்பற்றினர். இவர்களுக்கு நம் வாப்பா நாயகம் அவர்கள், அவரவர்கள் நினைத்துக்கொண்ட மட்டிலே தம்மைக் காட்டிக் கொண்டார்கள். ஹக்கின் கட்டளையும் அப்படியே இருந்தது. இதனாலேயே அனேகர் அத்தன்மையில் இருந்தனர்.

*(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் தங்கள் கலீபா. அல்ஹாஜ். எஸ். அப்துல்கரீம் ஜமாலி அவர்களுக்கு 08.08.1967 எழுதிய பட்டோலையிலிருந்து. தகவல்: கலீபா. டாக்டர் ஏ.அஷ்ரப்அலி எம்.டி.டி.எம். ஹக்கிய்யுல் காதிரி அவர்களின் வாட்ஸ்அப் பதிவு.)*

நாம் இந்த தமானில் (ஜமான்) பரிசுத்த ஹக்கான ஹக்கின் ஹக்கான குத்பு எனக் கூறுவதில் சிறிதும் அஞ்சவில்லை. இன்றைய ஸமான் எம் கண்காணிப்பில் உள்ளது. எம்மை எவர் நிராகரிக்கிறாரோ அவர் முன்வந்த எம் தந்தை நாயகம் அவர்களையும் எம் மூதாதையர்களையும் (குத்புமார்களையும்) நிராகரிப்பவர்கள். நிச்சயமாகவே நாம் இந்த ஸமானின் குத்பாவோம். நாமே முஹிய்யுத்தீனா யிருந்தோம். முஹிய்யுத்தீன் நம் பாட்டனார் அவர்களும், நம் தந்தை அவர்களும் நாமே. அவர்களே இன்று இந்த உருவத்தில் வெளியாயுள்ளது. இது ஹக்காகும். நம்மை நம்பாதோர் இருள் சூழ்ந்த கல்பையுடையவர்கள்.

*(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் தங்கள் கலீபா. அல்ஹாஜ். எஸ். அப்துல்கரீம் ஜமாலி அவர்களுக்கு 18.07.1967 எழுதிய பட்டோலையிலிருந்து. தகவல்: கலீபா டாக்டர் ஏ.அஷ்ரப் அலி எம்.டி.டி.எம். ஹக்கிய்யுல் காதிரி அவர்களின் வாட்ஸ்அப் பதிவு.)*



## கொய்த மலர்

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)

وَلَقَدْ اٰتَيْنَا مُوْسَى الْكِتٰبَ وَقَفَّيْنَا مِنْۢ بَعْدِهٖ بِالرُّسُلِ

நிச்சயமாகவே நாம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வேதத்தைக் கொடுத்தோம். அவர்களுக்குப் பின்னரும் (ஒருவருக்குப் பின் ஒருவராக) தூதர்களைத் தொடராக அனுப்பி வைத்தோம்.

وَاٰتَيْنَا عِيْسَى ابْنَ مَرْيَمَ الْبَيِّنٰتِ وَاَيَّدْنٰهُ بِرُوْحِ الْقُدُسِ

மர்யம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகனார் ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு தெளிவான பிரமாணங்களைக் கொடுத்து பரிசுத்த ஆவி (யாகிய ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம்) வழியாக அவர்களை நாம் பலப்படுத்தினோம். (அல்லது கை கொடுத்தோம். அல்லது உதவி செய்தோம்.)

اَفَكُلَّمَا جَآءَكُمْ رَسُوْلٌۢ بِمَا لَا تَهْوٰٓى اَنْفُسُكُمُ اسْتَكْبَرْتُمْ

நீங்கள் தாமே விரும்பாத ஒன்றைக் கொண்டு தூதர் வந்த போதெல்லாம் நீங்கள் அகங்காரங் கொண்டீர்களல்லவா?

فَفَرِيْقًا كَذَّبْتُمْ وَفَرِيْقًا تَقْتُلُوْنَ ۝ ٨٧

(அத்தூதரில்) ஒருபிரிவினரை நீங்கள் பொய்யாக்கினீர்கள். இன்னும் ஒருபிரிவினரை நீங்கள் கொலை செய்தீர்கள்.

وَقَالُوْا قُلُوْبُنَا غُلْفٌ

எம் உள்ளங்கள் மூடப்பட்டுள்ளன என்று அவர்கள் கூறினார்கள்.

بَلْ لَّعَنَهُمُ اللّٰهُ بِكُفْرِهِمْ

எனினும் அவர்களின் மறுப்பினிமித்தம் அல்லாஹ் அவர்களை முனிந்தான்.

فَقَلِيْلًا مَّا يُؤْمِنُوْنَ ۝ ٨٨

மேலும், அவர்கள் நம்பிக்கை கொள்வது குறைவே.

وَلَمَّا جَآءَهُمْ كِتٰبٌ مِّنْ عِنْدِ اللّٰهِ مُصَدِّقٌ لِّمَا مَعَهُمْ ۙ وَكَانُوْا مِنْ قَبْلُ يَسْتَفْتِحُوْنَ عَلَى الَّذِيْنَ كَفَرُوْا ۚ

(நஸாராக்களும் யஹூதிகளுமான) அவர்களிடத்துள்ள (தௌராத், இன்ஜீல்) வேதங்களை உண்மைப் படுத்தும் ஒருவேதமாக (சங்கைமிக்கக் குர்ஆன்) அல்லாஹூவிடமிருந்து அவர்களுக்கு வந்தபோது, இதற்கு முன்பெல்லாம் (யஹூதிகளும் நஸாராக்களுமான அவர்கள்) மறுப்பவர்களுக்கு எதிராக (தும்பக்கம் சங்கை மிக்க குர்ஆனைக் கொண்டும் முஹம்மது ஸல்லள்ளாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கொண்டும்) வெற்றியைத் தேடிக் கொண்டிருந்தனர்.

( [நஸாராக்களும் யஹூதிகளுமான] அவர்களிடத்துள்ள [தௌராத் இன்ஜீல்] வேதங்களை உண்மைப்படுத்தும் ஒருவேதம் [சங்கைமிக்க குர்ஆன்] அல்லாஹ்விடத்திருந்து அவர்களுக்கு வந்தது. [இவ்வேதமான சங்கைமிக்க குர்ஆன் இறக்கப்படுவதற்கு] முன்னரே [நஸாராக்களும் யஹூதிகளுமான] அவர்கள், [அவர்களில் மறுப்புடையோருக்கு] எதிராய் [குர்ஆனைக் கொண்டும், முஹம்மத் ஸல்லள்ளாஹு அலைஹிவஸல்லம் அவர்களைக் கொண்டும்] வெற்றியைத் தேடிக் கொண்டிருந்தனர்.)

فَلَمَّا جَآءَهُمْ مَّا عَرَفُوْا كَفَرُوْا بِهٖ ۫

அவர்கள் (அவ்வேதம் வருமென்று) முன்னரே அறிந்திருந்த (அவ்) வேதம் அவர்களிடத்து வந்தபோது அவர்கள் அதனை மறுத்தார்கள்.

فَلَعْنَةُ اللّٰهِ عَلَى الْكٰفِرِيْنَ ۝ ٨٩

ஆதலினால் அம்மறுப்பாளர்கள் மீது அல்லாஹுவின் முனிவு உண்டாகுக.

**(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)**

87. தவிர, (யூதர்களே) நிச்சயமாக நாம் மூஸாவுக்கு (ஒரு) வேதத்தைக் கொடுத்தோம். அவருக்குப்பின் தொடர்ச்சியாகப் பல தூதர்களையும் அனுப்பி

வைத்தோம். மர்யமுடைய மகன் ஈஸாவுக்குத் தெளிவான அத்தாட்சிகளைக் கொடுத்து அவரை (ஜிப்ரீல் என்னும்) பரிசுத்த ஆத்மாவைக் கொண்டும் பலப்படுத்தி வைத்தோம். (ஆனால்) உங்கள் மனம் விரும்பாத எதையும் (நமது) தூதர் ஒருவர் உங்களிடம் கொண்டுவந்த போதிலும் நீங்கள்கர்வம் (கொண்டு விலகிக்) கொள்ளவில்லையா? மேலும் (தூதர்களில்) சிலரை நீங்கள் பொய்யாக்கி, சிலரை கொலைசெய்தும் விட்டீர்கள்!

88. எங்கள் உள்ளங்கள் திரையிடப்பட்டிருக்கின்றன என்று அவர்கள் (பரிகாசமாகக்) கூறுகின்றனர். அவ்வாறன்று. அவர்களின் நிராகரிப்பின் காரணத்தால் அல்லாஹ் அவர்களை சபித்துவிட்டான். ஆதலால் அவர்கள் நம்பிக்கை கொள்வது வெகு சொற்பமே!

89. அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு ஒரு வேதம் வந்தது. அது அவர்களிடமுள்ள வேதத்தை உண்மையாக்கியும் வைக்கிறது. இதற்கு முன்பு அவர்கள் நிராகரிப்பவர்களுக்கு எதிராக தங்களுக்கு வெற்றியை அளிக்கும்படி (இந்த வேதத்தின் பொருட்டால் இறைவனிடம்) பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்கள் நன்கறிந் (து, வருமென எதிர்பார்த்) த இவ்வேதம் அவர்களிடம் வந்த சமயத்தில் இதை அவர்கள் நிராகரிக்கிறார்கள். ஆகவே, அந்த (நிராகரிப்பவர்களின் மீது அல்லாஹ்வின் சாபமுண்டாகுக!

## இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் அன்பு முரீதும் திருச்சி ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை பொருளாளருமான என்.ராஜா முஹம்மது ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் 9.7.2024 செவ்வாய் அன்று வஃபாத்தானார்கள். மறுநாள் புதன் கிழமை திருச்சி பீமநகர் துருப்பு பள்ளியில் நல்லடக்கம் நடைபெற்றது. அல்லாஹ் அன்னாரின் பிழைகள் பொறுத்து சுவனப்பேறினை அருள்வானாக! ஆமீன் !

**முக்கிய அறிவிப்பு:** அன்னார் திருச்சி ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் பொருளாளராகவும். மதுரஸா உண்டியல் வசூல் பொறுப்புகளில் சிறப்பாகவும் செயல்பட்டார். அவரது மறைவைத் தொடர்ந்து சங்கைக்குரிய இளைய நாயகம் அவர்களின் உத்தரவுப்படி, திருச்சி ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையின் பொருளாளராக, எஸ். காஜா மைதீன் பி.இ. அவர்கள் நியமிக்கப்பட்டார். அவருக்கு அனைவரும் ஒத்துழைப்பளித்து சபையும் மதுரஸாவும் சிறப்பாகச் செயல்பட வேண்டுகிறோம்.

(கலீபா. ஆலிம் புலவர். தலைவர். ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை. இந்தியா)

**16/07/2024**

## மணிச்சுடர்



தோஹாவில் கத்தார் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை சார்பாக 15/07/2024 அன்று முஹர்ரம் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. ஹுஸைன் (ரலி) அவர்களின் தியாகத்தை நினைவுகூரும் வகையில் சிறப்பு திக்ரு மஜ்லிஸ் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்கப் பொதுச் செயலாளர் பேராசிரியர் டாக்டர் சே.மு.மு. முகமதலி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். கர்பலா களம் குறித்துச் சபைத் தோழர் விவரித்தார். முஃபீல் மௌலானா வரவேற்புரை ஆற்றினார். அப்துல் வஹாப் நன்றி நவின்றார்.

### வாசக அன்பர்களே! மறைஞானப் பேழை சந்தா புதுப்பித்துவிட்டீர்களா?

**மறைஞானப் பேழை சந்தா அனுப்பவேண்டிய வங்கிக் கணக்கு எண்:**

**HUSSAIN MUHAMMAD.S. & JAHIR HUSSAIN.A**
**Indian Overseas Bank, SB A/c No. 209801000025255.**
**IFSC Code.IOBA 0002098**
**Branch- RM COLONY. DINDIGUL**

**பெயர் – முகவரி** பணம் அனுப்பியவுடன் தயவுசெய்து இந்த எண்களில் ஒன்றைத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துங்கள்.

**A. JAHIR HUSSAIN. 9597912410 - 9944576165**

## திருக்குறள்

**அழுக்கா றுடையான்கண் ஆக்கம் போன்று இல்லை**
**ஒழுக்கம் இலான்கண் உயர்வு. (135)**

பொறாமை உடையவனிடத்திலே ஆக்கம் அமையாததுபோல ஒழுக்கம் இல்லாதவன் வாழ்க்கையிலும் உயர்வு இல்லை.

---

**தாமேயும் இன்புறார் தக்கார்க்கும் நன்றாற்றார்**
**ஏமஞ்சார் நன்னெறியும் சேர்கலார் தாமயங்கி**
**ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்**
**போக்குவார் புல்லறிவினார்.** (நாலடியார்)

அற்ப அறிவினர் தாமும் செல்வத்தை நுகர மாட்டார், தகுதியுடைய பிறர்க்கும் நன்மை செய்யார். பாதுகாப்புப் பொருந்திய நல்லறவழியையும் பின்பற்றார். தாம் செல்வத்தில் மயங்கித் தூங்கி வீணே வாழ்நாளைக் கழிப்பர். (327)

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

ذو الحجة
**துல்ஹஜ்**

| | |
|---|---|
| 2 | நாகூர் யூஸுஃப் தாதா (ரஹ்) கந்தூரி |
| 4 | பொதக்குடி ஸர்தார் அப்துல் கறீம் ஹள்ரத் (ரஹ்) மறைவு |
| 9 | அரஃபா தினம் (ஹஜ்ஜுடைய நாள்) |
| 10 | புனித ஈதுல் அள்ஹா |
| 18 | உதுமான் (ரலி) ஷஹீது |
| 25 | சென்னை மோத்தீ பாபா (ரஹ்) உரூஸ் |

---

محرم
**முஹர்ரம்**

| | |
|---|---|
| 1 | ஹிஜ்ரி ஆண்டு பிறப்பு |
| 4 | ஹஸன் பஸரீ (ரலி) உதயம் |
| 5 | பாபா ஃபரீதுத்தீன் கன்ஸெஷக்கர் (ரஹ்) மறைவு |
| 6 | ஜகரிய்யா (அலை) மறைவு |
| 10 | இமாம் ஹுஸைன் (ரலி) பிரணாத்தியாகம், ஆஷ்ரா தினம் |
| 18 | இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி) மறைவு |
| 29 | ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) மறைவு |

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



**மனிதனே!**

நீ உண்மையை உணர்ந்து கொள். நீ உண்மையிலிருந்தல்லவா வெளியானாய். ஆதலால், உன் உடலுக்கு மெய்யென ஒரு பெயரும் உள்ளதல்லவா?

நீ உண்மையிலிருந்து வெளியானதும் நீ உன்னைப் பொய்யென நினைத்துப் பொய்யான உலக வாழ்வில் மருண்டுவிட்டாய். திரும்பவும் நீ உன்னை நினைத்துப் பார். அப்போது உன்னை நீ யாரென அறியக் கடவாய்.

**மனிதனே!**

உண்மைக்குப் பல எதிரிகள் உள்ளார்கள். அவர்களும் அழிவார்கள். எங்கு அவர்கள் குடிகொள்வார்களோ அவ்விடத்தையும்அடியோடு அழித்து விடுவார்கள். இந்த எதிரிகளை நீ மனமார வாழ்த்தி உள்ளத்தில் நிரப்பமாய்க் குடியிருக்க வைத்து விடுகிறாய்.

அவர்களால் உனக்கு ஏற்படும் பேரழிவை நீ சிந்திப்பதில்லை. அவர்கள் தாம் கோபம், சந்தேகம், கடும் பொறாமை, தற்பெருமை, கெடும் சுயநலம், நயவஞ்சகம் போன்றவர்கள். இவர்கள் குடியிருக்கும் இல்லம் மானிட ஜன்மத்தின் உள்ளம்.

**மனிதனே!**

உன் சந்தேகம் உன்னை முன்னேற்றக் கூடியதாய் இருக்க வேண்டும். உன் சந்தேகம் உன்னையோ நீ சந்தேகம் கொண்டவரையோ அழிக்காதிருக்க வேண்டும். அறியாதவற்றை அறிந்தவர்களிடம் அறிந்து கொள்வது சந்தேகத்தை நீக்கிக் கொள்ளும் வழியாகும். சந்தேகத்துடன் இறக்காதே. அது உனக்குக் கேடான முடிவாகும்.

# அமுத மொழிகள்

**மனிதனே!**

பொறாமை இல்லாவிட்டால் மனிதனுக்கு முன்னேற்றமே இருக்காது. உன்னைவிட மற்றவன் அறிஞன் அல்லது பணக்காரன் அல்லது வேறேதும் காரணங்களுக்காக நீ மற்றவனைப் பொறாமை கொண்டு அவனுடைய இடத்திலிருந்து அவனைத் தட்டிக் கீழே தள்ளிவிட முயற்சிக்காதே.

அது உனக்குப் பேரிடி. நீயும் அவர்களை வாழ்த்தி அவர்களைப் போலாக முயற்சி செய். எது நல்லது? உணர்ந்து பார்.

**மனிதனே!**

உன்னிடத்தில் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவுக்கு மட்டுமே நீ தற்பெருமை கொள். எல்லாம் உனக்குத் தெரியுமென தற்பெருமை கொள்ளாதே. அந்தத் தற்பெருமை உன்னை உயரவிடாது தடுக்கும் தடைக் கல்லாகும்.

உன்னிடம் எவ்வளவு உள்ளதோ அதை அணுவளவாய்க்கருது. மலையாய்க் கருதாதே. நீ மலையாய்க் கருதினால், அது உன்னை மறுபக்கம் கவிழ்த்துவிடும். நீ கற்றவற்றையும் மறந்துவிடுவாய். உன் பணத்தையும் இழந்து விடுவாய், உன் பலத்தையும் இழந்து விடுவாய். பைத்தியக்காரனாய்ப் பாதையில் அலைவாய். அதற்கும் ஒரு காலம் வரும்.

**மனிதனே!**

உனக்குச் சுயநலம் மிக முக்கியமானது. ஆனால், அது பிறர் நலத்துடனும் கலந்ததாக இருக்க வேண்டும். உன் சுயநலம் மற்றவனைப் பிடுங்காமலும் தாழ்த்தாமலும் அழிக்காமலும் இருக்கட்டும்.

**மனிதனே!**

உன் உள்ளத்தில் நயவஞ்சகம் பள்ளி கொண்டால், நீ நயவஞ்சகன் என்னும் பட்டத்தைப் பெற்றுவிடுவாய். உனக்கு மூவுலகிலும் இடமில்லை. நீ இறந்து போகும் இடம் இருட்டுக் குகையாகும். முழுமுதற்கு அஞ்சு.

உன்னை அணு முதலாம் எல்லா உயிர்களும் தூற்றும். உன்னைப் போற்கொடியவன் உலகிலில்லை. உலகத்தையே அழிக்கும் உபாயம் உன்னிடத்தில் தான் உண்டு.

# அமுத மொழிகள்

**மனிதனே!**

(பணக்காரனே) நீ சம்பாதித்த, உனக்குப் பணக்காரன், வள்ளல் எனவெல்லாம் பெயர் தந்த பெரும் பணம் உன்னுடையது அல்ல. உன்னுடைய உரிமை என நினைத்துக் கொள்ளாதே. ஏழை, எளியவர் வேர்வையை இரத்தமாகச் சிந்திச் சேமித்த பணத்தைத்தான் நீ எளிதாய்க் கூட்டிக் கட்டுக்கட்டாய் வைத்துள்ளாய்.

அதையெடுத்துப் பிழிந்து பார்த்தால், அதிலிருந்து ஏழை, எளியோரின் இரத்தம்தான் ஓடும். இது உன் பணமல்ல. பொதுப்பணம்.

இது இறைவனுக்கே சொந்தம். ஆதலால், பெருமை பேசாதே. கவனமாக இரு. ஏழைகளைக் கவனிப்பாயாக. இறைவனைப் பயந்து கொள்.

**மனிதனே!**

தன்னைப் பணக்காரன் கோடீஸ்வரன் எனக் கூறிக் கொண்டு மமதையடிக்கும் ஏமாளி. உண்மையை அறியாதவன். அவனிடத்துள்ள பணமும் அவனுக்குரியதல்ல. ஆதலால், அவன் செய்ய வேண்டியதென்ன? அவன் வைத்துள்ள பணத்தில் ஓரளவுப் பங்கேனும் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படல் வேண்டும். எனவே, அவன் அவனிடத்திலுள்ள பணம் பொதுப்பணம் எனக் கருதல் வேண்டும். இந்தப் பணம் தன்னுடையது என உரிமை கொண்டாடல் பொருத்தமுடையதன்று.

**மனிதனே!**

ஒரு கதை சொல்கிறேன் கேட்டுக்கொள். ஓரூரில் மனிதர் ஒருவர் இருந்தாராம். அவரிடத்தில் நிறையப் பணம் இருந்ததாம். அப்பணத்தை அம்மனிதர் அலமாரியில் கட்டுக்கட்டாய் வைத்திருந்தாராம். அவர் பாதையில் போகும்போது பணக்காரர் ஒருவர் வருகிறார் என்பதற்காக எல்லோரும் அவருக்கு சலாம் (வந்தனை) கூறுவார்களாம். அவர், அப்போது சலாத்து (வந்தனை)க்குப் பதிலாக, “நான் கூறுகிறேன், நான் கூறுகிறேன்” என்று கூறிக் கொண்டே போவாராம். வீட்டுக்குப் போனதும் அம்மனிதர் அலமாரியைத் திறந்து “உனக்குப் பாதையில் எத்தனையோ பேர் ஸலாம் கூறினார்கள்” “என்னிடம் பணம் இல்லையானால் யார் எனக்கு ஸலாம் சொல்வார்? என்னிடம் பணம் இருப்பதனால்தான் ஸலாம் சொல்கிறார்கள். எனவே, இந்த ஸலாம் எனக்கு உரித்தானதல்ல. என்னிடத்துள்ள பணத்துக்கே உரித்தாகும்” என்பாராம். பணம் எல்லாவற்றிற்கும் உரித்தானவன் ஒருவன் உள்ளான். அவன்தான் இறைவன்.

# உமர் ரலி புராணம்

*(நேரிசை வெண்பா)*

**கையினாற் செய்த கருங்கற் சிலையை**
**தைனமும் வாழ்த்தித் தலைசாய்த்து - மையற்ற**
**கொள்கை யுடைத்தாரைக் கொண்டதொரு நாடிது**
**வெள்குமே யுண்மை வெறித்து.**

**பொருள் :** சொல்லவறியாத கல்லிற் சிலை செதுக்கி (அதனை) வல்லவனாகத் துதித்தல் மடமையே. (இவ்வாறு செய்தல்) நல்லதோ. முற்றும் நிறைந்து முழுமையாய் நிற்கும் முதலோனாகிய இறைவனுக்கு முன்னே கல்லை ஒப்பாக்குதல் கற்றவர்களுக்கு என்றும் குறை(யை உண்டாக்கும்.) கரங்களாற் செய்த கருங்கற் சிலையை எப்போதும் வாழ்த்தித் தலை சாய்த்து வணங்கும் குற்றத்தைக் கொண்ட கொள்கை யுடையாரை வைத்துக் கொண்டிருக்கும் ஒரு நாடு இது. (இதைக் கண்டு) உண்மையானது ஆவேசங் கொண்டு வெட்கங் கொள்ளும்.

**குறிப்பு :**

தைன: தலை சாய்த்தல், வணங்கல். மை: குற்றம். யுண்மை வெறித்து வெள்கும். ஆவேசம்: வெறி, கோபம்.

**விளக்கம்:**

ஒரு நாடு, அதில் வாழும் மக்களின் கொள்கை, கோட்பாடு, நடை முறை, செயல் இவற்றைக்கொண்டுதான் மதிப்பும் மாண்பும் பெறும். நல்லதையே நினைத்து நன்மையே செய்யும் மக்கள் வாழ்ந்தால் அது மற்றவர்களுக்கு முன்மாதிரியாவும் திகழும், ஆனால் அறிவுக்குப் பொருத்தமின்றி கற்சிலைகளைத் தாங்களே செதுக்கி உருவாக்கி, அவையே தங்கள் தெய்வமென நம்பி, அதற்குத் தலைசாய்த்து வணங்கும் மக்களைக் கொண்ட நாடு அது. கற்சிலைகளை இறைவனுக்கு ஒப்பாக்கி வணங்கினால் சத்தியம் கோபம் கொண்டு நாணும்.

**மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியில்**

# *புனித புஹாரி ஷரீஃப் மஜ்லிஸ் தொடக்க விழா!*

திருச்சியில் 30 ஆண்டுகளாக இயங்கிவரும் மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரியில், நேற்று (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் 2 மணி வரை மதுரஸதுல் ஹஸனைன் வளாகத்தில் உள்ள மஸ்ஜிதுல் ஹக்கிய் பள்ளிவாசலில், புனித புஹாரி ஷரீஃப் மஜ்லிஸ் தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்கமாக, மதுரஸதுல் ஹஸனைன் வளாகத்தில் உள்ள, **சங்கைக்குரிய ஷைகு நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீம்)** அவர்களின் **புனித ரவ்ழா ஷரீஃபில் ஜியாரத் நிகழ்ச்சி** நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து மஸ்ஜிதுல் ஹக்கிய் பள்ளிவாசலில் அமைக்கப்பெற்ற சங்கைக்குரிய குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (ரலி) அவர்களின் நினைவரங்கில் நடைபெற்ற புனித புஹாரி ஷரீஃப் மஜ்லிஸ் தொடக்க விழாவிற்கு, சுன்னத் ஜமாஅத் பேரியக்கத் தலைவரும், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி ஆலோசகருமான **அபுல் பயான் அபுத்தலாயில் அல்ஹாஜ். அல்ஹாஃபிழ் மௌலவி. Dr. M. ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி ஹள்ரத் அவர்கள்** தலைமை தாங்கி, புனித புஹாரி ஷரீஃப் மஜ்லிஸைத் தொடங்கி வைத்தார்கள். திருமுல்லைவாசல் சங்கைமிகு ஹஸன் மௌலானா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், கண்ணியத்திற்குரிய கலீபாக்கள், மதுரஸதுல் ஹஸனைன் நிர்வாகிகள் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் முன்னிலை வகித்தனர்.

மதுரஸா பேராசிரியர் **ஹாஃபிழ். மௌலவி.J.முஹம்மது ஷாஹீன் ஆலிம் குத்ஸி** அவர்கள் கிராஅத் ஓதினார். மதுரஸாவில் இந்த வருடம் பட்டம் பெற்ற **மௌலவி.J.ரஹ்மான் ஷா ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** மற்றும் **மௌலவி.S.நவ்ஷாத் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** ஆகியோர் வஹ்தத்துல் வுஜூத் பாடலைப் பாடினர். மதுரஸா தஹ்ஸீல் மாணவர் **ஜனாப்.S.முஹம்மது முஷ்ரஃப்**, நபிப்புகழ்ப்பா பாடினார். நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய இராமநாதபுரம் ஹாஃபிழ். **மௌலவி.V.M.முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் வரவேற்றுப் பேசினார். மதுரஸதுல் ஹஸனைன் நாழிர் ஹள்ரத் **மௌலவி.N.ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி**

**ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் அறிமுக உரையாற்றினார். யாஸீனிய் மௌலவிகள் பேரவைத் தலைவர் **மௌலவி. A.கலீல் ரஹ்மான் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள், மதுரஸதுல் ஹஸனைன் பேராசிரியர் **மௌலவி.A.அப்துல் ரஹ்மான் ஆலிம் குத்ஸி அவர்கள்,** சென்னை ஆமிர் கலீமி அரபிக் கல்லூரி துணை நாழிர் **மௌலவி. அல்ஹாஃபிழ். நஜீர் அஹ்மத் ஆலிம் ஆமிரி ஹள்ரத்** அவர்கள், இந்திய ஏகத்துவ மெய்ஞ்ஞான சபைத் தலைவரும் மறைஞானப் பேழை ஆசிரியருமான கலீபா. ஆலிம் புலவர். **மௌலவி.S.ஹுஸைன் முஹம்மது ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ ஹள்ரத் அவர்கள்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சென்னை ஆமிர் கலீமி அரபிக் கல்லூரி தாளாளர் **மௌலவி. K.K.முஹம்மது முஹ்யித்தீன் ஆலிம் ஆமிரி ஜமாலி** அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

புனித புஹாரி ஷரீஃப் மஜ்லிஸ் தொடக்க நிகழ்ச்சியாக, **அபுல் பயான் அபுத்தலாயில் அல்ஹாஜ். அல்ஹாஃபிழ் மௌலவி. Dr. M. ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி ஹள்ரத் அவர்கள்** முதல் ஹதீஸை ஓத, அதைத் தொடர்ந்து, **கலீபா. ஆலிம் புலவர். மௌலவி.S.ஹுஸைன் முஹம்மது ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள்** இரண்டாவது ஹதீஸையும், **மதுரஸதுல் ஹஸனைன் நாழிர் ஹள்ரத் மௌலவி.N.ஸயீது முஹம்மது ஆலிம் மிஸ்பாஹி ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் மூன்றாம் ஹதீஸையும் ஓத, அவையில் இருந்த ஆலிம் பெருமக்கள் மற்றும் யாஸீனிய் மௌலவிமார்கள் ஆகியோர் அடுத்தடுத்த ஹதீஸ்களை ஓதிட, தொடங்கி வைத்தார்கள். (அல்ஹம்துலில்லாஹ்). அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை செயலாளர் **ஜனாப்.S.I.தவ்லத் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் நன்றியுரையாற்றினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சித்தாரிய்யா மதுரஸா உஸ்தாது உள்ளிட்ட ஆலிம் பெருமக்களுக்கு, சங்கைக்குரிய குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (ரலி) அவர்கள் புஹாரி ஷரீஃப் கிதாபுக்கு விரிவுரை இயற்றிய இக்ததுத் தராரீ நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில், திருச்சி, திண்டுக்கல், ஈரோடு, மதுரை, மேலூர், பெரம்பலூர், சென்னை, மதுக்கூர், பாக்கம் கோட்டூர், இராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களிலிருந்தும் ஆத்தும சகோதரர்கள், ஆலிம் பெருமக்கள், யாஸீனிய் மௌலவிமார்கள் முன்னாள் மாணவர்கள், மதுரஸா மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். துஆ ஸலவாத்துடன் நிகழ்ச்சி நிறைவு பெற்றது. கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பான கந்தூரி உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திண்டுக்கல் மௌலவி. காஜா ஷரீஃப் யாஸீனிய், ஜனாப். அப்துல் மஜீத் ஹக்கிய்யுல் காதிரிய், ஜனாப். நாகூர் மீரான் ஹக்கிய்யுல் காதிரிய், ஜனாப். முஹம்மது

மீரான் ஹக்கிய்யுல் காதிரிய், முஹம்மது ஃபாரிஹ் ஹக்கிய்யுல் காதிரிய் ஜனாப். திருப்பூர் ஜியாவுல் ஹக் ஹக்கிய்யுல் காதிரிய், ஈரோடு ஜனாப். மன்சூர் ஹக்கிய்யுல் காதிரிய், வாலிகண்டபுரம் ஜனாப் ஸையது முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோர் கந்தூரி உணவு தயாரிப்புப் பணி மற்றும் பரிமாறுதல் பணிகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுரஸா நாழிர் ஹள்ரத், மதுரஸா முதல்வர் ஆகியோர் உள்ளிட்ட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் செய்திருந்தனர்.

**தகவல் : அ.நை.மு. அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி.**

---

சிறப்புரையாற்றிய ஹாஃபிழ், மௌலவி, கே.கே. முஹம்மது முஹிய்யுத்தீன் ஆலிம் ஆமிரி ஜமாலி அவர்களுக்கு கலீபா முஸ்தபா ஹ.காதிரி. பொன்னடை போர்த்தினார்.




ஹாஃபிழ், மௌலவி, டாக்டர். எம். ஷேக் அப்துல்லாஹ் ஜமாலி ஹள்ரத் அவர்கள் உரை நிகழ்த்தும் காட்சி.



# எமக்கருள்வீர் நாயகமே!

நபியெல்லாம் யாஸீன் நபிக் கீடாகுமா?
வேதமெல்லாம் வேந்தர் தந்த மறையாகுமா?
போதமெல்லாம் எம்நபி தந்த ஹதீஸாகுமா?
வாழ்வெல்லாம் அஹ்லுபைத்தின் வாழ்வாகுமா?
(நபியெல்லாம்)

கருணை இறை தந்த ஒரு மணிமகுடம்
கவலையற்ற வாழ்வு தந்த கருணையிடம்
சுவனம் தேடி நிற்பவர்க்கு அருள் அல்லவா? – நபி அருள் அல்லவா?
மறுமை வாழ்வை சிறக்கவைக்கும் பொருளல்லவா –
மறை பொருளல்லவா?

என்ன இல்லை நபிநாதர் தந்த வாழ்விலே
இல்லை என்னும் நிலை இல்லா நபி நாதரே!
இறைவன் ஒன்று என்றாய் வாழ்ந்த வள்ளலே!
ஓர் இறையை அறிந்தால் உண்டு நன்மையே – நமக்கு உண்டு நன்மையே!
(நபியெல்லாம்)

தவ்ஹீத் என்னும் ஓர் இறைவன் உண்மையாலேயே
உலகத்தாரை உயர்த்தி வைத்த உயிர் நபியே!
தன்னை முழுதும் தியாகம் செய்து தரணி காத்திட்ட –
அருளால் தரணி காத்திட்ட
தங்க நாயகமே உம்மைப் போற்றியே –
என்றும் உம்மைப் போற்றியே!
(நபியெல்லாம்)

ஓர் இறைக் கொள்கையிலே உயர் மார்க்கத்தை
நிறைவாக செய்துவிட்ட நிறைநபியே
வஹீ என்னும் தத்துவத்தில் திரு மறையை – தந்த திருமறையை
அனுதினமும் அறிந்து வாழ அருள்வீர்களே

*ஆக்கம் உதவி : செய்யிது முபீல் மௌலானா (கேம்ப்–கத்தார்)*
*ஆக்கம்: ஏ.என். எம். முஹம்மது யூசுப் (கேம்ப்–கத்தார்)*

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

وعبادالرّحمن يمشون على الارض هونا

وإذاخاطبهم الجاهلون قالوا سلاما

குர்ஆன் மஜீதிலே, பேரருளாளனின் அடியார் பூமியில் அடக்கத்தோடு நடப்பார்கள். அஞ்ஞானிகள் சம்பாசித்தால் சாந்தி என்று கூறுவார்கள் என அல்லாஹ் கூறுகிறான். இவ்வகையில் அறபிகள் திரும்பினர். இஸ்லாம் அஞ்ஞானத்தை அழித்து மெய்ஞ்ஞானத்தை நிலைநாட்டியது. அல்லாஹு விடம் சங்கைக்குரியவர் உங்களில் பக்தி மிக்கவராவர் என்று அல்லாஹ் கூறுகிறான்.

انّ اكرمكم عندالله اتقاكم

அன்று முதல் மனித வாழ்வு அல்லாஹ்வின் பக்தியில் மலர்ந்தது. அரபாவிலே குத்பதுல் விதாஉ (خطبة الوداع) பிரசங்கத்திலே சத்திய ஜோதி நபிகள் பிரான் கீழ்வருமாறு கூறினார்கள். " உங்களை விட்டு அஞ்ஞான அகந்தையை அல்லாஹ் போக்கிவிட்டான். பிதாக்களைக் கொண்டுள்ள அஞ்ஞானப் பெருமையையும் அவன் போக்கிவிட்டான். நீங்கள் எல்லாரும் ஆதமுக்கு உரியவர்கள். ஆதமோ மண்ணிலிருந்துள்ளவர். பக்தி கொண்டல்லாது அறபியல்லாதவர் மீது அறபிக்குச் சிறப்பில்லை" என்று கூறினார்கள். தலைமைத்துவம் மார்க்கத்திற்கும், சகோதரத்துவம் அல்லாஹ்வின் கருமத்திற்கும் ஆயின. பழிப்பு, தற்பெருமை இவைகள் பற்றிப் பாடும்

கவிஞனும் கோபமான, விரோத நச்சுக்களைத் தன் நாவிலிருந்து துளிக்கும் பிரசங்கியும் இரத்தத்தில் மேய்ந்து கொண்டிருந்த குறை வீரனும் மற்ற அஞ்ஞானிகளும் இஸ்லாத்தின் சங்க நாத அழைப்பை ஏற்று சன்மார்க்கத் துவஜத்தின் கீழ் கூடினர். அல்லாஹ்வினதும் தூதரினதும் ஏவலையேசெய்தார்கள்; சொன்னார்கள் குர்ஆனும் ஹதீஸூம் சமூகச் சட்டமாகி விதிகளையும், ஒழுக்க வழக்கங்களையும், குணவிஷேடங்களையும் அவை ஏற்படுத்தின. ஏகேச்சுவர கலிமா, தௌஹீத், நற்கருமங்கள் முதலானவை மக்கள் மனதில் பதிந்து பிரகாசித்தன. பாமரத்தன்மை நீங்கி அறிவு அபிவிருத்தியடைந்தது. பிறமொழி நூல்கள், காவியங்கள் ஆகியன அறபியில் மொழிபெயர்க்கப் பட்டன.

அட்லாண்டிக் கடற்கரையிலிருந்து சைனா வரை, காகஸஸிலிருந்து திஹ்லீ வரை வெற்றி கொண்ட முஸ்லிம்கள் ஆங்காங்கு வாழ்ந்த மக்களின் அறிவு, நாகரிகம், கலை, இலக்கியம் முதலானவற்றைக் கற்று, அரபி மொழி, இலக்கியங்களுக்கு புதிய அழகைக் கொடுத்தனர். அந்நாடுகளில் இஸ்லாமியச் சத்திய நெறிகளைப் பரப்பினார்கள்.

## இஸ்லாமிய இலக்கியம்

அறபி மொழியில் எழுதப்பட்ட முந்திய நூல் அல்குர்ஆனாகும். இலக்கியம், சரித்திரம் இவைகளுக்கு இதைப் படிக்கிறது அவசியமாகும். அது புத்திப் பூர்வமான இலக்கியத்தின் சீவனும், மனித நாகரிகத்தின் மிக உயர்ந்த தத்துவ போதனையுமாகும். அது புனையப்பட்ட கவிதையுமல்ல, சங்கீதமுமல்ல, சாதாரண வசனமுமல்ல. ஆனால் விரிவான ஈற்றே எதுகையுள்ள வசனங்களாகும். அதனைப் பாராயணஞ் செய்யும்போது இதர சப்தங்கள் அடங்கி, மனம் ஒடுங்கி, ஆசையும் ஆவலும் பெருகுகின்றன.

அன்றைய அறிவாளிகள் அல்குர்ஆனைப் பற்றிப் பலபடக் கூறினார்கள். எனினும் போட்டி அரங்குகளில் அவர்கள் தோற்றோடி வீழ்ந்தனர். அதன் பக்கமேஅடைக்கலம் புகுந்தனர்.இன்று வரை நிகரில்லா வெற்றி சூடி இலக்கியப் பண்பாடுகளில் ஒப்பற்றஒளிமயமாய்ப் பிரகாசிக்கின்றது. அதிலொரு சிறு வாக்கியத்தைப் போன்றும் அமைக்க முடியாது இன்று வரை உலகம்

தோற்றுள்ளது. அதிலொரு புள்ளியும் சிதையாது, தவறாது இன்றுவரை ஜீவனோடிருக்கும் அபூர்வ இலக்கியம் திருக்குர்ஆன் ஒன்றே.

அஃது அல்லாஹ¯வின் திருவாக்கு. இன்றி யமையாத அறநூற் பொக்கிஷம். மனித நாகரிகத்தின் இயற்கைச் சட்டம். அஞ்ஞான இருளைப் போக்கிய மெய்ஞ்ஞான ஜோதி; சூரியன். இருபத்து மூன்று வருடங்களில் மக்காவிலும் மதீனாவிலும் நூற்றுப்பதினான்கு அத்தியாயங்களாக இறங்கியது. மனிதர் மத்தியில் பாதுகாக்கப்பட்டு நித்திய ஜீவனோடுள்ள ஆச்சரியமான பொக்கிஷம் இதுவாகும்.

இவ்வேத காவியம் பல்வகை அறிவுகளுக்கு மூலாதாரமாயும் பல புதுச் சொற்களை அமைத்துக் கொடுத்த இலக்கியக் கருவூலமாயும் அமைந்துள்ளது.

பரிசுத்த குர்ஆன் நபிகள் பெருமானார் அவர்கள் மறைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே பூரணமாகியது. அதன் வாக்கியங்கள் ஒழுங்கு செய்யப்பட்டும் அத்தியாயங்கள் பூர்த்தியாயும் இருந்தன. கலீபா அபூபக்கர் (ரலி) அர்கள் ஸைத் பின் ஸாபித் அவர்களுக்கிட்ட கட்டளைப் பிரகாரம் ஸைத் (زَيد) அவர்கள் ஒரு புத்தகமாய்க் குர்ஆனைத் திரட்டினார். அது கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களிடமும் பின்பு கலீபா உமர் (ரலி) அவர்களிடமும் அவர்களுக்குப் பின்னர் அவர்கள் மகளார் உம்முல் முஉமீனின் ஹப்ஸா நாயகி அவர்களிடமும் இருந்தது. பின் கலீபா உஸ்மான் (ரலி) அர்கள் மேற்கூறப்பட்ட முஸ்ஹபை வர வைத்து ஏழு பிரதிகள் எழுத வைத்து மக்கா, மதீனா, சாம், யமன், பஹ்ரைன், பஸரா, கூபா ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைத்து மற்றவற்றை ஒழித்து அவற்றுக்கு இமாம் என்று பெயரிட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது. இன்று எம்மிடம் உள்ள முஸ்ஹப்கள் இதிற் கொஞ்சமும் மாற்றமில்லாப் பிரதிகளாகும்.

اِنَّا نَحْنُ نَزَّلْنَاالذِّكْرَ وَاِنَّالَهُ لَحَافِظُوْنَ

அந்தக் குர்ஆனை நாமே இறக்கினோம்; நாமே அதைப் பாதுகாக்கிறோம் என அல்லாஹ் கூறுகிறான்.

(இலக்கியம் விரியும்)

**மதுராப்புர, அஸ்ஸபா வெள்ளி மலருக்காக அஸ்ஸெய்யித் ஜெமாலியா ஸெய்யிக் கலீல் அவ்ன் மௌலானா சார், அவர்கள் தன் கைப்பட எழுதி என்னிடமீந்த மரபுக் கவிதை (அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்) பல வருடங்களாகப் பக்குவமாகப் பாதுகாத்து வருகின்றேன் நற்கவிதை என்பதால்.. எனையும் சொல்லியிருப்பதால்.**

நாடா கொன்றோ காடா கொன்றோ

அவலா கொன்றோ மிசையா

கொன்றோ

எவ்வழி நல்லவ ராடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே.

கலைமகன் ஃபைரூஜ் (இந்தக் கவிதையினை சங்கைமிகு ஸாஜித் அலி மௌலானா அவர்களிடம் கையளித்தவர்)


J.S.K.A.A.H. MOWLANA

52, BUHARI MASJID MAWATHA,
WELIGAMA
SRILANKA
☎ 50616

DATE

1.

(நேரிசை ஆசிரியப்பா)

— காலையின் றெழுந்தார் கனிவுடன் வாழ்வளர்
கலையா நின்ற இருமை நாளும்
மகிமை நிறைந்தார் மாநிலந் தன்னில்
நிலையா நிறைய நிற்றமிழ் தன்னை
சீருற வளர்த்த செந்தமிழ்ச் செல்வம்
வாரியென் நிறைந்த மதுரை மாநகர்
நின்றே இசைபெயர் நிறைந்த மாந்தர்
நன்றே வாழும் நன்மது ராபுரி

தன்னிற் பலகலை ஆய்வுந் தேர்ந்தோர்
இன்புற வாழும் இவ்வூர் தன்னில்
தொன்றுதி மாதவன் முஸ்லிம் கனிடை
நிதலது கொப்பாய் நுண்கலை பகர்ந்தே
பயின்றவை ஆராய்ந்தவர் பன்னூற் கற்றவர்
செயந்திரன் வாய்ந்த சீர்யாழ் நகரவர்
தமிழிற் சிறியன் தாமுயர் பட்டம்
அமிழ்தெனப் பெற்றவர் அப்துல் லத்தீப்
திருக்குர் ஆனும் இயற்கையுந் தோய
உருபெயர் கொண்ட செயநூல் யாத்தார்
ஆயுர் வைத்தியர் அப்துல் கரீமவர்
ஆய்வு சொல்லாம் அகத்தினில் வைத்தே
சின்னார் கதியவர் ஏழை எளியவர்
கண்ணினை தன்னளவி காட்டிய பெருந்தகை
சோதிலா வைத்தியர் தொப்படா சோலைகம்
சாதனை பெண்ணாச் சான்றோர் நதியர்
சேவையாற் செய்த சீத ரவரே
இறையிலா பணிகி சேடமோன் றாமக்க
நிறைவான் தமென நிலமான் நீந்தார்
மதுரா புரியில் மதுரக் கலையினை
திருவிழப் பெற்றுத் தாய்வ ராக

**J.S.K.A.A.H. MOWLANA**

52, BUHARI MASJID MAWATHA
WELIGAMA
SRILANKA
☎ 50616

DATE

ஆலயந் தனிலே நிலவுடன் விளங்கு
சேவை செய்யும் திறமை சென்றும்
கால மெல்லாம் கொடிய இலங்கும்
ஆலம் எனவே அக்கறை வளர்க்கும்
அறிவுக் கூடம் அஸ்ஸபா தன்னில்
சிறந்த அதிபர் சிறிய செயலர்
மக்கள் தொண்டர் மாணாக் கர்தமை
மிக்கக் கருதும் மென்மை மனத்தவர்
திடமொடு பலமாய்த் திறமையுடன் வென்றோ
செம்மைக் கல்வி சிறந்த ஆட்டும்
மாணவர் கல்வி வளர்ச்சிக் கிறுதுவரை
பேணிப் புரியும் பேரா சான்கள்
சிறப்பினார் நல்லார் சிறியர் கல்வி
சிறப்புற நூடகம் கொண்டனைத் திறமை
மிறா புகழ்ந்த [illegible]
நிலைவர் சிறப்பான் முறையே தமிழ்மொழி
வளர்க்கும் பணியில் மாணாச் செயல்புரி
உழைத்தவர் கலைமகன் உன்னத [illegible]
புகழ்மிகு மஜீத புரிவாங் கோலை
செய்தோர் இவ்வூர் முன்னிலை புரியார்
வேத மிஸ்பா மிகுதிறம் [illegible]
பேந்த மெளர்பதும் பிசிறு மிக்கலை


J.S.K.A.A.H. MOWLANA

52, BUHARI MASJID MAWATHA,
WELIGAMA,
SRILANKA
☎ 50618

DATE

இஸ்லா மாயின் எல்லா மொன்றே

மதுரமா மின்ப மதுரா புரியென்

(ஜே. எஸ். கே. ஏ. ஏ. எச். மௌலானா

# மதுரமா மின்ப மதுரா புரி

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

நல்லவர் நற்குணத்தார்
    நனிமிகு நன்ம னத்தார்
வல்லவன் மறையு ணர்ந்தார்
    மதிநபி மொழிய றிந்தார்
எல்லவர் தாமும் வாழும்
    எழின்மது ராபு ரிக்கண்
இல்லையென் றிலாத நன்மை
    இலகுமா மென்று மாமே

(நேரிசை யாசிரியப்பா)

கலையினிற் றேர்ந்தார் கனிவுடன் வாழ்வார்
கலையா நின்றே கருமம தாற்றும்
வலிமிகு முளத்தார் மாநிலந்தன்னில்
நலியாதுறைய நற்றமிழ் தன்னை
சீருற வளர்த்த செந்தமிழ்ச் சங்கம்
வாரியென் றுரைத்த மதுரை மாநகர்
நின்றே குடிபெயர் நிறைகுண மாந்தர்
நன்றே வாழும் நன்மது ராபுரி
தன்னிற் பலகலை சாலவுங் கற்றோர்
இன்புற வாழும் இவ்வூர் தன்னின்
முதற்றமி ழசான் முஸ்லிம் களிடை
நுதலரு கோப்பாய் நுண்கலை யகத்தே
பயின்றவ ராய்ந்தவர் பன்னூற் கற்றவர்
செயற்றிறன் வாய்ந்த சீர்யாழ் நகரவர்
தமிழிற் சூரியன் தானெனும் பட்டம்
அமிழ்தெனப் பெற்றவர் அப்துல் லத்தீப்
திருக்குர் ஆனும் இயற்கையுஞ் சீராய்
உருபெயர் கொண்ட வொருநூ லமைத்தார்
ஆயுர் வைத்தியர் அப்துல் கரீமவர்
ஆயு ளெல்லாம் அகத்தினில் வைத்தே
எண்ணற் கரியவர் ஏழை எளியவர்
கண்ணே தண்ணளி காட்டிய பெருந்தகை
கோதிலா வைத்தியர் குணப்படா நோயெலாம்
சாதனை யென்னச் சான்றோ ரறியச்
சுகம்பெறச் செய்த சூர ரவரே
தகுந்த கல்வி தம்மவர் பயில
குறையிலா பள்ளிக் கூடமொன் றமைக்க
நிறைமன துடனே நிலமொன் றீந்தார்
மதுரா புரியில் மதுரக் கலையினை
துதிபெறப் பெற்றுத் தூயவ ராக

ஞாலந் தனிலே நலமுடன் விளங்க
சாலச் செய்த தருமம தென்றும்
கால மெல்லாம்  கரவா திலங்கும்
ஆலமதென்ன அகல்கலை வளர்க்கும்
அறிவுக் கூடம் அல்ஸபா தன்னின்
சிறந்த அதிபர் சீரிய செயலர்
மக்கள் தொண்டர் மாணாக் கர்நலன்
மிக்கக் கருதும் மேன்மை ஹபீளவர்
தம்மொடு பலமாய்த் தகையுட னின்றே
செம்மைக் கல்வி சீருற வூட்டும்
மாணவர் கல்வி வளர்ச்சிக் குறுதுணை
பேணிப் புரியும்  பேரா சான்கள்
சிறப்பினர் நல்லார் சீரியர் கல்வி
வெறுப்பற வூட்டும் மேன்குணத் தினரே
தென்னகந் தன்னிற் தேர்ந்த புகழுடன்
மின்னென மின்னி வளங்குவ தஸ்ஸபா
மதுரா புரத்தில் வர்த்தக மாணி
முதலவர் இர்பான் முறையே தமிழ் மொழி
வளர்க்கும் பணியில் மானச் செயல்புரி
உளத்தவர் கலைமகன்  உன்னத பைரூஸ்
புகழ்மிகு மதுரா புரிவாழ் வோரை
இகழ்வோர் இவ்வூர்  முதனிலை யறியார்
வேத மிஸ்லா மிதனிற் சாதி
பேத மென்பதும் பிறிது மில்லை
இஸ்லா மாயின் எல்லா மொன்றே
முஸ்லிம் களெல்லா முயிர்த் தோழர்தாம்
அறநெறி காட்டும் ஆலிம்கள் தாமும்
அறிஞர்கள் தாமும் அழகுறத் தொடரும்
மதுரை நின்று வந்தவர் வாழும்
மதுரமா மின்ப மதுரா புரியெனின்
மிகையா காதது மேலும்
தகைமை மிக்க தாகுமு கத்தே.

(ஜே.எஸ்.கே.ஏ.ஏ.எச்.  மௌலானா)

# பாடல் பெற்ற திருத்தலம்

செய்தி : அட்வகேட். ஏ.என். எம். லியாகத் அலி பி.எஸ்ஸி.பி.எல். ஹ. காதிரி
ஏ.என். எம். முஹம்மது யூஸுப் பி.எஸ்ஸி. ஹ. காதிரி

பிரபஞ்சமாய், அதன் அருட்கொடையாய், பிரபஞ்சத்தின் பூரண நல்லருளால், மனித குலத்திற்கே இக்காலத்தின் வழிகாட்டியாய்? பஞ்சபூதங்களின் அரு உருவாய் இப்பூவுலகில் தன்னை நாடி வரும் அனைத்து மக்களுக்கும் இறையை அறியும் வழிகாட்டியாய், சிர்க் என்னும் இணை வைத்தலை அறவே நீக்கி, சிறப்புடன் இம்மை மறுமை வாழ்வை மகிழ்ச்சியுடன், வலிமையுடன் வாழ தங்களின் எல்லா முரீதீன்களையும் தயார் படுத்தி எப்போதும் அவர்களை உயர்நிலையில் வாழ வைத்து வரும்,

அகில உலகங்களின் அருட்கொடையான, அனைத்து நபிமார்களின் தலைவரான, ஏக இறையின் மாட்சிமைமிக்க தூதருமான, சர்தாரே ஆலம் எம்பெருமான் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருப்பேரரும், அரபு உலகமான பாக்தாத் நகரிலிருந்து இந்தியா வந்து தமிழ்நாடு, கேரளா ஆகிய இடங்களில் பல்லாயிரக்கணக்கான மனிதர்களுக்கு இஸ்லாமிய நல்லறிவு காட்டி, பல நூறு அற்புதங்கள் செய்து, மக்களின் நல்வாழ்விற்குத் துணையாக இருந்து, பல அறிவுப் பூர்வமான நூற்களை இவ்வுலகிற்குத் தந்து, அருள் மிகவும் சம்பை நகரில் மறைந்து வாழும் அப்பா நாயகம் (ரலி) என்று எல்லோராலும் அழைக்கப்படும் ஆற்றல் மிகு கௌதுஸ் ஸமான் செய்யிது முஹம்மது மௌலானா (ரலி) அவர்களின் குல வழி திருப்பேரரும், நடமாடும் பல்கலைக்கழகமாய், பன்மொழி வித்தகராய், இந்தியா இலங்கையில் கல்வி கலாசாலைகள் பலவற்றை நிறுவி, உலக மார்க்கக் கல்வி மூலம் தங்கள் நாட்டு மக்களை மேன்மையாக்கியவர்களும், அரபுத்தமிழ் அகராதி தந்தவர்களும் புனித புஹாரி சரீப் விரிவுரை தந்தவர்களும், அரபு மக்களும் போற்றக் கூடிய அரபிப் புலமை பெற்றவர்களும், இன்ஸானுல் காமில் போன்ற எண்ணற்ற அரபு, தமிழ், இலக்கியங்களை இப்பூவுலகிற்குத் தந்தவர்களும், திருமுல்லை நகர் வாழ் குத்புல் அக்தாப் செய்யிது யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் தவப்புதல்வராகிய குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஹக்குல் முபீன், செய்யிது கலீல் அவ்ன் மௌலானா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் (ரலி) ஆகிய நமது ஆருயிர் செய்கு நாயகம் அவர்கள் தங்களின் எல்லா முரீதுப் பிள்ளைகளின் சிறப்புக்களையும் முரீதுப்பிள்ளைகள் வாழும் ஊரின், நாட்டின் சிறப்புக்களையும் பல இடங்களில் பதிவு செய்தும், நேரில் பாராட்டியுமிருக்கிறார்கள். அந்த வகையில்

அவர்களின் பரிபூரணத் திரு உருவிலிருந்து தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுக்கா மதுக்கூர் பற்றி அவர்களின் இல்ஹாமிலிருந்து வெளி வந்த 3 பாடல்களை கீழே காணலாம். ஹக்கின் மள்ஹராகிய, செய்கு நாயகத்தின் புகழ்ப் பாடல் பெற்ற தலமாக மதிக்கூராக இனி இப்பூவுலகில் திகழும் என்பதே உண்மை.

நற்றவப் பேரருள் நல்லடி யார்களாம்

குற்றம தற்றரும் கூர்மதி – பெற்றார்

வதியும் மதுக்கூர் மதிக்கூர்த் தியாக

விதயமுங் கொண்டா ரிவர்.

இதன் பொருள்: மதிக்கு ஊரான மதுக்கூரிலே வாழும் இவர்கள் நற்றவப் பேர் அருள் நல்லடியார்களாம். குற்றமது அற்று அரும் கூர் மதி பெற்றவர்களாம். தியாக இதயமும் கொண்டவர்களாம்.

கொண்டு கூட்டு: மதிக்கூர்+ மதுக்கூர் + வதியும் + இவர் + நற்றவப் + பேரருள் + நல்லடியார்களாம் + குற்றமது + அற்று + அரும் + கூர்மதி + பெற்றார் + தியாக+ இதயமும் + கொண்டார்.

மதிகூர் மதிக்கூர் மதுக்கூ ரிலதே

துதிசேரும் மானிடர் சூழ்பதி–ஆதி

அருணிறை நன்னகர் ஆர்வலன் காவல்

இருபுகழ் நன்னா டிது.

மதி+ கூர், மதிக்கு+ஊர் அருள்+நிறை

நல்+நகர். ஆர்+வல்+அன்: நிறைந்த

வலிமையை உடையவன். இரு: பெரும்



மதிகூர் மதிக்கூர் மதுக்கூர் வதிநர்

மதிநேர் மதிதே மறைமா –துதிசேர்

பதிஞா னநிறை பாதந மடைந்தோர்

உதிசூ ரியரே உரை.

# வஹ்ஹாபியர் பொய்யர்,

*(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் கவிஞர். கிளியனூர் இஸ்மத் ஹக்கிய்யுல் காதிரி அவர்களுக்கு எழுதிய பட்டோலை.)*

பரிசுத்த ஹக்கின் திருவருளுக்கும் நமது அன்பிற்கும் துஆவிற்கும் உரிய பிள்ளை லியாகத் அலி அவர்களுக்கு ஜே.எஸ். கே.ஏ.ஏ.எச். மௌலானா வின் அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்).

உங்களின் 16.11.90கடிதம் கண்டேன். அங்கு உங்கள் நலமறிந்தோம். அவ்வாறே இங்கும் உள்ளோம். உங்களைப் பற்றிய விளக்கம் பார்த்தோம். நீங்கள் வஹ்ஹாபிக் கொடியவர்களின் கூட்டத்தில் சேர்ந்து அவர்களுக்காக உழைத்த விஷயமும் அறிந்தோம். பின்னர் ஹக்காகிய உண்மையின் பக்கம் ஹக்கு உங்களைத் திருப்பிவிட்டதறிந்துபேரானந்தப் பரவசம் கொண்டு ஹக்கிடத்தில் உங்களுக்காகப் பிரார்த்தனை புரிந்தோம்.

வஹ்ஹாபியர் பொய்யர், பாபிகள், உண்மைக்கு முரணானவர்கள். தனியான கொள்கை அவர்களுக்கில்லை. பணத்துக்காக– வயிறு வளர்ப்பதற்காக– தலைமைத்தனத்துக்காக, தற்பெருமைக்காக எதையும் செய்வார்கள். பொறாமைக்காரர்கள், ஞானம் என்பதே இல்லை. இஸ்லாத்தினதும் பெருமானார் ரஸூல் நாயகம் (ஸல்) அவர்களதும் கொடிய விரோதிகள். எல்லாம் அறிந்தவர்கள் போல் நடிப்பார்கள். அதனுள் புகுந்து பார்த்தால் உண்மையானவர்கள் அதன் அலங்கோலத்தை அறிவார்கள். நம் உயிர்ப்பிள்ளை காலித் அவர்களைச் சந்தித்து விவாதம் நடாத்தியதும் பின்னால் எதில் உண்மையுள்ளது என்பதை அறிந்ததும் ஹக்கின் செயலே. காரணம் உங்கள் மூதாதையர் ஹக்கின் அருளையும் ஒளிவையும் பெற்றவர்கள். அதனால் நீங்கள் இந்த நிலைக்கு வந்திருப்பது ஹக்கின் பேரருளேயாகும். அனைத்தும் யாவும் நான் நீ யென இல்லாது ஹக்கே என மூல மந்திரம் உங்களில் பிரகாசிக்குமாக! ஆமீன்.

பிள்ளையே, நீங்கள் வஹ்ஹாபிகளில் ஒரு முக்கியப் புள்ளியாகவும் எழுத்தாளராகவும் இருந்தமையால் வஹ்ஹாபிகளின் நிலைமகளைப் பற்றி நிறைய அறிந்திருப்பீர்கள். ஆதலால் வஹ்ஹாபியத்தில் நீங்கள் சேர்ந்ததிலிருந்து ஞானத்தில் புகுந்ததுவரையுள்ள விஷயத்தை ஒழுங்கான கட்டுரையாக அமைத்து நமது மெய்ஞ்ஞானப்பேழையில் வெளியிட்டால் மிக்கப் பொருத்தமானதாயி ருக்கும். மீதியுள்ள நல்லவர்கள் வஹ்ஹாபியத்தில் சேர்ந்திருந்தால் இதைப் பார்த்து அவர்களும் உண்மையின் பக்கம் திரும்ப ஒரு வரப்பிரசாதமாகும். வஹ்ஹாபியத்தின் எல்லாக் குறைகளையும் எழுதுங்கள். நீங்கள் முன்பு

வஹ்ஹாபியத்தைப் பற்றி எழுதியதாகவும் அதே புனைப் பெயரில் உண்மையை அறிந்த பின்பு ஸுன்னத் வல் ஜமாஅத்தின் அடிப்படையில் ஞானத்தின் சிறப்பு எவ்வளவானது என்பதை எழுதுவதாகவும் எழுதுங்கள். ஹக்கு நன்மை அருளும்.

பிள்ளையே, நீங்கள் நமக்கு எழுதிய கடிதத்தின் தலைப்பை மட்டும் விட்டுவிட்டு மற்ற முக்கியமான விஷயங்களை நம் பத்திரிகையில் வெளியிட்டால் நலம் எனக் கருதுகிறோம். அது நல்லதெனக் கண்டால் அதை நமக்கு மதுக்கூர் பிள்ளைகள் மூலம் அறிவியுங்கள். உங்களைச் சந்திக்க ஹக்கு அருளும். உங்களை மானுசீகமான முறையில் முரீதுப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டோம். அல்ஹம்து லில்லாஹ். நேரில் பைஅத் செய்வோம். இன்ஷாஅல்லாஹ். ஹக்கு உங்களைப் பூரணமாய் இரட்சித்துக் காக்குமாக. நல்வாழ்வும் நீடிய ஆயுளும் அருளுமாக. நிறைந்த செல்வமும் ஞானச் செல்வமும் அருளுமாக. அனைவருக்கும் நம் ஸலாம். துஆ.

## திருமறை - தேன் துளி!

*உங்களில் சிலரை சிலரைவிட செல்வத்தில் அல்லாஹ் மேன்மையாக்கி வைத்திருக்கிறான். அப்படி மேன்மையாக்கப்பட்டவர்கள் தங்களுக்குக் கட்டுப்பட்ட (வேலைக்காரர், அடிமை ஆகியவர்) கள் தங்கள் செல்வத்தில் (தங்களுக்கு) சமமானவர்களாக இருந்தும் (முறைப்படி) அதை அவர்களுக்குக் கொடுப்பதில்லை. (இப்படிச் செய்வதன் மூலம் அவர்களுக்கு அளித்திருக்கின்ற) அல்லாஹ்வின் அருளை அவர்கள் நிராகரிக்கின்றனரா? (அல்குர்ஆன் 14.16-71.)*

### இலங்கை வானொலி புகழ் அப்துல் ஹமீது அவர்கள் வாழ்வில்....

அந்தக் காலத்தில் சைக்கிளை அரை மணி, ஒரு மணி நேரத்துக்கு வாடகைக்கு எடுத்துக் கெள்ளலாம். சைக்கிள் வாங்கி ஓட்டிக் கொண்டு சென்று வேலைகளை முடித்து விட்டுத் திரும்ப வந்து ஒப்படைத்து விடலாம். அரைமணி நேரத்துக்குப் 10 காசு, ஒரு மணி என்றால் 20 காசு. நாம் இன்னார் என்பதற்காகத் தெரிந்தவர் யாராவது நம்மைக் கடைக்காரருக்கு அறிமுகப் படுத்த வேண்டும். அவ்வளவு தான். ஒருமுறை நம் தமிழ்நாட்டில் ஏதோ ஒரு சிறிய கிராமத்துக்கு வந்த நம் ஹமீது அங்குள்ள கடையில் சைக்கிள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

முன்ன பின்ன தெரியாத ஆளுக்கெல்லாம் சைக்கிள் குடுக்க முடியாது.

ஹமீது சொன்னாராம். ஒரு நிமிடம் கண்ணை மூடிக் கொள்ளுங்கள்.

நிகழ்ச்சியை உங்களுக்கு வழங்குவது உங்கள் அப்துல் ஹமீது.

ஐயா.... நீங்களா, வணக்கம், வணக்கம். காசே குடுக்க வேண்டாம்.

எந்தசைக்கிளை வேணுமாலும் எடுத்துக்கோங்க..... (வாட்ஸ்அப் செய்தி)

# நபியவர்களின் பாத அணியின் வரைபடமும்,

# அஷ்ரஃப் அலீ தானவீயின் முஹப்பத்துர் ரஸூலும்

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்.

விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள் மேலும், அவன்பால் நெருங்குவதற்குரிய வழியை தேடிக் கொள்ளுங்கள் மேலும், அவனுடைய பாதையில் யுத்தம் செய்யுங்கள் (அதனால்) நீங்கள் வெற்றியடையலாம். (சூரா அல்மாயிதா 35)

மேற்கண்ட வசனத்திலுள்ள வஸீலா என்பதற்கு பெருமானார் அவர்களின் புனிதமிகு "நஃலைன்" பாத அணியின் "நக்ஸ்" – வரைபடத்தை வைத்து வஸீலா தேடுங்கள் என்று மௌலானா அஷ்ரஃப் அலீ தானவீ விளக்கம் தருகிறார்கள்.

மேலும் கூறுகிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் நாமெல்லாம் தொடர்ந்து பல துயரங்கள், கஷ்டங்கள், நோய்களினால் பல இன்னல்களைப் பெறுகிறோம். இவைகளிலிருந்து நம் நிவாரணம் பெற பாவமன்னிப்பு தேடினாலும், தவ்பா செய்தாலும், செயல் பாடுகளை சீர்படுத்தினாலும் அதிலிருந்து ஈடேற்றம் அடைய முடியவில்லை.

எனவே, அதற்கு ஒரே வழிமுறை என்னவென்றால், நாம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனிதமிகு நஃலைன் ஷரீஃபின் வரைபடத்தைக் கொண்டு வஸீலா தேடுவதால் தான் ஈடேற்றம் அடைய முடியும்.

நஃலைன் ஷரீஃபைக் கொண்ட வஸீலா தேடும் முறையை ஹள்ரத் தானவீ அவர்கள் கூறிகிறார்கள். தஹஜ்ஜுத் நேரத்தில் எழுந்து, தஹஜ்ஜத் நஃபிலைத் தொழுது விட்டு 11 முறை ஸலவாத்து ஓதுதல், 11 முறை திருக்கலிமா (அவ்வல் கலிமாவை) சொல்லுதல், 11 முறை பாவமன்னிப்பு தேடுதல்.

பின்னர் நஃலைன் ஷரீஃபின் வரைபடத்தைத் தலையில் ரொம்ப மரியாதையுடன் வைத்து, யாஅல்லாஹ், பெருமானார் அவர்களின் நஃலைன் ஷரீபை என் தலையில் வைத்துள்ளேன். நான் அந்த பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தாழ்ந்த அடிமையில் ஒருவனாவேன். எனவே, இந்த நஃலைன் ஷரீஃபின் பரக்கத்தால் என்னுடைய இந்த தேவையைப் பூர்த்தி செய்து கொடுப்பாயாக!

என்று கூறிய பின் மிகவும் கண்ணித்துடன் தலையிலிருந்து இறக்கி கண்ணில் ஒத்திக் கொண்டு, அதனை முத்தமிட வேண்டும். பின்னர் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்து சில கவிகளை (அதாவது மவ்லித் நஃத்துகளை) படிக்க வேண்டும். இவ்வாறு செய்து முடித்த பிறகு பிரமிக்கும் அளவிற்கு உன்னுடைய தேவைகள், நாட்டங்கள் நிறைவேறுவதைப் பார்க்கலாம்.

(நூல்: நைலுஷ் ஷிஃபா பி நஃலில் முஸ்தஃபா)

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்

ஸல்லல்லாஹு அலா முஹம்மது

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

# நிக்காஹ் என்னும் திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதுஹு.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருளாலும், ஏக இறையின் ஜோதியும் சர்வத்தின் மூல ஒளியுமாகிய **எம்பெருமானார் கண்மணி நாயகம் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்** அவர்களின் பெருங்கருணையாலும், குத்புகள் கோமான் **முஹியுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்** அவர்களின் நல்லாசியாலும், அன்னவர்களின் அருமைத்திருப்பேரர்கள் சங்கைக்குரிய **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் முஹம்மது மௌலானா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு** அவர்கள் – சங்கைக்குரிய குத்புல் அக்தாப் **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு** அவர்கள் – சங்கைக்குரிய குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூது **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்** அவர்களின் துஆ பரக்கத்தாலும், எங்களின் சற்குரு சங்கைக்குரிய வாப்பா நாயகம் **ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம்** அவர்களின் திருவருட் பார்வையிலும், நிகழும் ஹிஜ்ரி 1446 ஆம் ஆண்டு ஸபர் பிறை 26 **(01.09.2024) ஞாயிற்றுக்கிழமை** முற்பகல் 11.30 மணியளவில் முபாரக்கான வேளையில்,

மதுக்கூர் மர்ஹூம் M.A.அப்துல் ரஹீம் – மர்ஹூமா.A.ஜெமிலா பீவி
மர்ஹூம் A.செய்யது அலி – மர்ஹூமா.A.செய்பு நிசா ஆகியோரின்
பேரனும், M.V.M.A.வாவா முஹம்மது – V.ஜரினா பீவி ஆகிய
எங்களது அன்பு மகனாருமான தீன்குலச் செல்வன்

**V. முஹம்மது பாஹிம்** B.Tech., **ஹக்கிய்யுல் காதிரிய்**

**மணாளருக்கும்**



மதுக்கூர் வ.ஊ.சி. தெரு, மர்ஹூம்.ச.ந.சே.முஹம்மது யூசுப் ராவுத்தர் –
அதிராம்பட்டினம் மேலத்தெரு, மர்ஹூம்.N.M.S.காதர் மொய்தீன்
ஆகியோரின் பேத்தியும், ஜனாப்.M.ஜெய்னுல்லாபுதீன் –
ஜனாபா.J.ரஹிஜான் பீவி ஆகியோரது
அன்பு மகளாருமான தீன்குலச் செல்வி

**J.அஸ்லினா (முபல்லிகா)**

**மணாளிக்கும்**

இன்ஷா அல்லாஹ் திருமணம் செய்ய, **சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் நல்லாசியுடன்** பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, திருமணம் **மதுக்கூர் A.K.S. திருமண மஹாலில்** நடைபெற உள்ளது. மேற்படி நிக்காஹ் மஜ்லிஸிலும், அதனைத் தொடர்ந்து **M.S.A.மஹாலில்** நடைபெற உள்ள விருந்திலும் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் அவசியம் கலந்துகொண்டு, மணமக்களை வாழ்த்தி துஆச் செய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்புடன் அழைக்கும்...**

ஜனாப்.**M.நூருல்லாஹ்**
ஹக்கிய்யுல் காதிரிய் (கேம்ப்: துபை)
ஜனாபா.**N.மதிகா** ஹக்கிய்யுல் காதிரிய்
ஜனாப்.**N.முஹம்மது பாஹிர்**
ஹக்கிய்யுல் காதிரிய்

**மாமன்மார்கள்...**

ஜனாப்.**S.ரஹ்மத்துல்லாஹ்** & சன்ஸ்
ஜனாப்.**N.P.O.M.நத்தர்ஷா** ஹக்கிய்யுல் காதிரிய்
(கேம்ப் : துபை)

**தங்கள் அன்புள்ள...**

**“மைனர் வீடு” M.V.M.A.வாவா முஹம்மது** ஹக்கிய்யுல் காதிரிய்,
**V.ஜரினா பீவி** ஹக்கிய்யுல் காதிரிய்,
**மச்சான்:** மர்ஹூம் **A.அப்துல் கரீம்,**

22/36, வாடிவாசல், வைக்கோல்காரத் தெரு, பைத்துல் நிஉமா இல்லம்,
மானம்புச்சாவடி, தஞ்சாவூர். செல் : 90950 98092

# இராமநாதபுரம் மாவட்டமும்

# இந்து - இஸ்லாமியர் ஒற்றுமையும்.

இரா.ச.மு. ஹமீது பத்திரிகையாளர் 9941086586

நமது இந்திய நாடு ஒரு சமய சார்பற்ற நாடு என்ற போதிலும் சிற்சில இடங்களில் சமயத்தின் பேரில் சில கருத்து முரண்பாடுகளும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் நம் தமிழகத்தில் இந்துக்களும் இஸ்லாமியரும் காலங்காலமாக சகோதர மனப்பான்மையுடனே பழகி வருகின்றனர்.

இந்துக்கள் இஸ்லாமிய மதக்கோட்பாடுகளையும், இஸ்லாமியர் இந்து மதக் கோட்பாடுகளையும் கண்ணும் கருத்துமாய் மதித்து வந்தள்ளனர் என்பதற்கு பல ஆதாரங்கள் கிடைத்துள்ளது.

நமக்குக் கிடைத்துள்ள ஆவணங்களின் படி இங்குள்ள தமிழ் இஸ்லாமியர் ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழகத்திற்கு வணிகம் செய்ய வந்து பின் இங்குள்ள மக்களுடன் மக்களாக வாழ்ந்து வந்துள்ளனர். சில இஸ்லாமியர் பாண்டி மன்னர்கள் படையிலும் இணைந்து பணியாற்றி உள்ளனர். இதேபோல் இராமநாதபுரம் மாவட்டமும் தமிழ் முஸ்லீம்களுக்கு முக்கியமான இடமாகும். இங்கு இந்துக்களும் இஸ்லாமியரும் காலங்காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். இதற்கு சில வரலாற்றுச்சான்றுகளைப் பார்ப்போம்

(வரலாற்று ஆதாரங்கள்– செப்பேடுகள் – கல்வெட்டுகள் – இராசமு ஹமீது – 9941086586)

**1, உத்திரகோசமங்கை திருவாச்சிக் கல்வெட்டு (உழுத்துவெட்டு)**

இராமநாதபுரத்தில் அமைந்திருக்கும் திருஉத்திரகோசமங்கை உலகின் மிகப்பழைமையான சிவத்தலங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. மண் தோன்றியதா? மங்கை தோன்றியதா? என்ற சொலவடையே இதற்கு சாட்சியாக கூறப்படுகிறது. மேலும் இங்கு 3000 ஆண்டுகள் பழைமையான இலந்தைமரம் தலவிருட்சமாக உள்ளது. இங்குதான் தமிழ்ப் பெருங்கோ இராவணன் மற்றும் மண்டோதரி திருமணம் நடந்ததாகக் கூறப்படுகிறது. அதை பறைசாற்றும் வகையில் இங்கு மண்டோதரி பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றும் உள்ளது. மாணிக்கவாசகர் பாடிய திருத்தலம். இதுபோன்ற பல அழியாப் புகழைப் பெற்ற உத்திரகோசமங்கை திருத்தலத்தில் இந்து இஸ்லாமியர் ஒற்றுமைக்கு சான்றாக கல்வெட்டு (எழுத்துவெட்டு) ஒன்றும் உள்ளது.

இத்தலத்தில் மங்களநாதரை தரிசிக்கச் செல்லும் பிரதான நுழைவாயின் முன்புறம் நந்திக்குப் பின்புறம் விளக்கேற்ற வசதியாக யாழி வடிவ வெண்கலத் திருவாச்சி ஒன்று உள்ளது. இதில் ஒரு நூற்றாண்டு பழைமையான எழுத்துவெட்டு (கல்வெட்டு) ஒன்று உள்ளது.

திரு உத்திரகோசமங்கை மங்களேஸ்வரி அம்மன் சன்னதிக்கு 230 விளக்குகள் கொண்ட இந்த திருவாச்சியை மதுரையைச் சார்ந்த செய்யது இசுமாயில் சாய்பு என்பவர் தான் மேனேஜர் அதிகாரத்தில் இருந்த போது செய்து கொடுத்துள்ளார். இந்த கல்வெட்டின் முதல் மூன்று வரிகள் எழுத்து வெட்டின் காலத்தைக் குறிக்கிறது. அதில் முதல் வரியில் சாலிவாஹன சகாப்தம் 1845 குரோதி வருஷம் என உள்ளது. தற்போதைய காலண்டர்படி இதன் காலம் 1624 ஆக இருக்கலாம். இதன் எடை 842 3/4சேர் (ஒரு சேர் 280 கிராம் பழங்காலத் தமிழர் அளவை) ஆகும். இச்செய்தியை சிற்பம் வீரபுத்திர ஆசாரி செதுக்கி உள்ளார் என்ற செய்தியும் உள்ளது.

இந்த திருவாச்சி கல்வெட்டு இந்துக் கோவிலுக்கு இஸ்லாமியர் ஒருவர் தலைமையில் செய்து கொடுத்த தானத்தைக் குறிக்கிறது. இது சமய பொறைக்கு சிறந்த உதாரணம் ஆகும்.

**கல்வெட்டுப் பாடம்**

1. சாலிவாஹன சகாப்தம் 1845 சரியான குரோதி வருஷம் ஆவணி மாதம்
2. 27 உ சோமவாரமும் கிருஷ்ணபஷத்து துவாதெசியும் பூச நச்சத்திரமும்
3. வரிக நாழி யோகமும் கவுல பால்கரணம் கூடிய சுபதினத்தில்
4. திருவுத்தரகோசமங்கை மங்களேசுவரியம்மன் சன்னதிக்கு மதுரை
5. இலிருக்கும் மகாராசராச மகி சையது இசுமாயில் சாய்பு அவர்கள் மானேஜர் அதிகாரத்தில் மேற்படி கோவில் அமிஷத்திருந்து செய்து
6. வைத்த 230 விளக்குள்ள வெங்கல யாழிமுகத் திருவாச்சி
7. க்கு சேர்
8. 842 3/4
9. சில்ப்பம வீரபுத்திர ஆசா
10. ரி ஸ்வஹஸ்த லிகிதம்.

2. அபிராமம் சங்கர விநாயகம் கோவில் கல்வெட்டு

கமுதி அருகே உள்ள அபிராமம் என்ற ஊரில் சங்கர விநாயகர் கேவில் முன்புறம் கலியுகராமன் ஊரணி அருகே உள்ள கல்வெட்டில் மக்கத்து அம்மா என்ற இஸ்லாமியப் பெண்மணி அந்த கோவிலுக்கு லைட் உபயம் செய்துள்ளார்.

அங்குள்ளவர்களும் அந்த கோவில் ஊரணிக்கும் இஸ்லாமியரே இடம் கொடுத்தனர் எனக் கூறுகின்றனர்.

**அபிராமம் பள்ளி வாசலுக்குக் கொடை.**

அபிராமம் பள்ளிவாசலுக்கு அபிராமம் ஓர் நில மானியம் மற்றும் பள்ளிவாசல் திருவிளக்குக்கு முகவூரணி அய்யா நாளையில் ஆதிநாராயணப்பிள்ளை நிலம் வாங்கி விட்டது பிங்கள வருடம் ஆடி 8 ஆம் தேதி என்ற செய்தியும் ஓலைச்சுவடிகளில் பதிவாகி உள்ளது.

**3. மேலக்கொடுமலூர் முருகன் கோவிலில் இஸ்லாமியர் ஒருவருக்குச் சிலை**

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மிகப் பழைமையான சிற்பம் தான் இந்த மேலக்கொடுமளூரில் உள்ள முருகனின் திருமேனி. இது முற்கால பாண்டியர் காலத்து கி.பி. 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று கூறப்படுகிறது.

இவ்வூரின் கண்மாய் கரையில் அமைந்துள்ள குமிளீஸ்வரர் சிவன் கோயிலின் கல்வெட்டுகள், மத்திய தொல்லியல் துறையால் படி எடுக்கப்பட்டு 1907 ம் ஆண்டு, ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

இக்கோயிலில் உள்ள மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுக்களின் மூலம் இவ்வூர், வடதலைச் செம்மிய நாட்டு மேலக்கொடுமளூரான உத்தம பாண்டிய நல்லூர் என்றும், இறைவனின் திருப்பெயர் உத்தம பாண்டிய ஈஸ்வரமுடையார் என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சவ்வாது புலவர்**

பல்வேறு புலவர்கள் வாழ்ந்து மறைந்த இந்தத் தமிழகத்தில் மத நல்லிணக்கத்துக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து மறைந்தவர் சவ்வாது புலவர் என்றழைக்கப்பட்ட முஹம்மது மீர் சவ்வாது ஆவார்.

குமரக்கடவுள் என்ற சுப்ரமணிய சுவாமி கோயிலுக்கு சவ்வாது புலவர் பல பதிகங்களைப் பாடியுள்ளார். இதற்காக புலவரை கவுரவப்படுத்தும் விதமாக, கோயிலின் விமானத்தில் அவரது சிலையை சுதை வடிவில் அமைத்துள்ளது சமய நல்லிணக்கத்துக்குச் சான்றாக விளங்குகிறது. முருகன் கோயிலில் முஸ்லிம் புலவருக்கு சிலை வைத்து சமய மத நல்லிணக்கத்தை மக்கள் இன்றும் பேணிக்காத்து வருகின்றனர் இது இஸ்லாமியர்களுக்கிடையே உள்ள சகோதரத்துவத்தையும், மத நல்லிணக்கத்திற்கு ஓர் சிறந்த சான்றாக்வும் விளங்குகிறது.

முஹம்மது மீர் சவ்வாது புலவர் அவர்கள் பரமக்குடி அருகில் உள்ள எமனேஸ்வரம் எனும் சிற்றூரில் 1745 ம் ஆண்டு பிறந்தவர். இவர், முகையதீன் ஆண்டகை பிள்ளைத் தமிழ், நாகைக் கலம்பகம், மதீனத் தந்தாதி, ராஜராஜேஸ்வரி பஞ்சரத்ன மாலை, வண்ணக் கவிகள், சீட்டுக் கவிகள், சித்திரக் கவிகள், மாலை மாற்றுகள், குமரையா பதி கங்களைப் பாடியுள்ளார்.

## 4. திருப்புல்லாணி ஆதிஜெகந்நாத பெருமாள் அரபுக் கல்வெட்டுகள்

திருப்புல்லாணியில் உள்ள ஆதிஜெகந்நாத பெருமாள் கோவிலின் ஒரு தூணிலும், தென்திசையின் வெளிப்புறத்திலும் சில அரபிக் கல்வெட்டுகள் உள்ளன. இவை தெரியப்படுத்தும் செய்தியினை அறிந்து கொள்ள முடியவில்லை.

## இஸ்லாமியர் இராமேஸ்வரம் தொடர்பு

இராமேஸ்வரத்திலுள்ள இஸ்லாமியர்களின் புனிதத்தலமான ஆபில் காபில் பள்ளிவாசலுக்கு சேதுபதி மன்னர் முத்துக்குமார விசயரகுநாத சேதுபதி புதுக்குளம் என்ற ஊரை தானமாகக் கொடுத்ததை செப்பேடுகள் மூலம் அறியமுடிகிறது. மனிதக்குலத்தின் ஆதிப்பிதாவான ஆதம், ஹவ்வா அம்மையருக்குப் பிறந்த முதல் மக்களான ஆபில், காபில் என்ற சகோதரர்களது அடக்கவிடமாக இவ்விடம் கருதப்படுகிறது.

இங்குள்ள இஸ்லாமியர் கடல் வாணிபத்தில் ஈடுபட்டு வந்தனர். இராமேஸ்வரம் திருக்கோயில் தெப்பத்திருவிழாவிற்கு இவர்கள் தோன்று தொட்டு படகுகள் கொடுத்து வருவதும், இந்த கைங்காரியத்திற்காக இவர்களுக்கு ஆண்டுதோறும் திருக்கோயிலில் இருந்து வத்திரப்பாடி முதலிய சம்பாவணைகள் கொடுக்கப் பெறுவதும், பொங்கல், தீபாவளி போன்ற நன்னாட்களில் கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்பெறுவது போல ஒரு குறிப்பிட்ட மரைக்காயர் குடும்பத்திற்கு எண்ணெய், பச்சரிசி மற்றும் புதுப்பானை போன்ற திருவிழாச்சீர்கள் ஆண்டுதோறும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதும் மத நல்லிணக்கததிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்

இதில் இன்னுமொரு சிறப்பான செய்தி. கி.பி. 19ஆம் நூற்றாண்டில் இராமேசுவரம் சுல்தான் மரைக்காயர் என்பவர் திருக்கோவில் அறங்காவலராக இருந்தார் என்பதும், அவரது பெறுப்பில் கோயில் கருவூலம், திருவாபரணம் ஆகியன இருந்து வந்துள்ளது என்பதும் முக்கியமானதாகும்.

## 6. ஏர்வாடி பள்ளிவாசலுக்கு சேதுபதி மன்னர் கொடை

இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்திருக்கும் ஏர்வாடி தர்ஹா குதுபுஸ் சுல்தான் சையத் இப்ராகிம் பாதுசாவின் கல்லறை அமைந்துள்ள இடமாகும். இங்கு நடைபெறும் ஏர்வாடி சந்தனக்கூடு திருவிழா இந்திய அளவில் புகழ்பெற்ற சமய

நல்லிணக்கத்திற்கான திருவிழாவாகும். இத்திருவிழாவில் புனிதத் தேரை செய்வதும் இழுத்துச் செல்வதும் இந்து சமயத்தைச் சார்ந்த வெவ்வேறு சமூகத்தினர் ஆவர். இந்த பள்ளிவாசலுக்கு குமாரமுத்து விசய ரகுனாத சேதுபதி மாயாகுளம் என்ற ஊரை தானமாக அளித்ததை ஒரு செப்பேடு பதிவு செய்துள்ளது.

**7. சேதுபதியும் சீதக்காதியும்**

கிழவன் சேதுபதி மன்னர் காலத்தில் வள்ளல் சீதக்காதி சேதுபதி மன்னரின் அமைச்சராக விளங்கினார். கிழவன் சேதுபதி தீவிர இந்து மத பற்றாளராக இருந்த போதிலும் இஸ்லாம் மதத்தைச் சார்ந்த சீதக்காதியை தன் சொந்தத் தம்பி போல் உயர் மதிப்புடன் நடத்தினார். சீதக்காதி அவர்கட்கு விசயரகுநாதப் பெரியதம்பி என்ற சிறப்புப் பெயரை அளித்து சிறப்பித்தார். இராமநாதபுரம் அரண்மனையை நிர்மாணித்ததில் வள்ளல் சீதக்காதியின் பங்கு அளப்பரியது.

**8.முதுகுளத்தூர் சுப்பிரமணி சுவாமி கோயிலும் ராவுத்தர் மண்டிகப்படியும்**

இராமநாதபுரம் சேதுபதிகள் சமஸ்தானத்திற்கு பாத்தியமான திருக்கோயில் அது. கோயிலின் எதிரே சரவணப்பொய்கை என்ற முதுகுளம் உள்ளது. ஒரு காலத்தில் சரவணப்பொய்கையின் தென்மேற்கு மூலையிலே பிள்ளையார் கோவில் அருகில் முஸ்லீம்களுக்கும் மண்டகப்படி உண்டு. அதற்கு ராவுத்தர் மண்டகப்படி என்று பெயர். சுப்ரமணிய சுவாமி கோவிலிலே பத்து நாட்கள் நடக்கும் பங்குனி உத்திர தேரோட்ட திருவிழாவில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சமூகத்து மண்டகப்படியில் தேரோட்டத்திற்கு வரவேற்பு உண்டு. இறுதி நாளில் ராவுத்தர் மண்டகப்படியில் வரவேற்பு முருகன் கோவில் தேரோட்டத்திற்கு முதுகுளத்தூர் ராவுத்தர்கள் வரவேற்பு அளித்து நீர் மோர்மற்றும் எங்கள் பகுதிக்கேயுரிய பாணாக்காரம் பக்தர்களுக்கு பரவசத்துடன் கொடுத்து மகிழ்ந்த எங்கள் பெரியவர்களின் மத எல்லைகள் கடந்த இணக்கமான வாழ்வு நினைவு கொள்ளத் தக்கது. இறுதியாக தேரோட்டத்திற்கு வரவேற்பளித்து நீர் மோர் கொடுத்து மகிழ்ந்தவர் பெரியவர் கூலையன் அப்பாஸ் ராவுத்தர் அவர்கள். அவருக்கும் பின்னே யாரும் இதை தொடந்ததாகத் தெரியவில்லை. அந்த மண்டகப்படியும் தற்போது கிராம நிர்வாக அலுவலர் அலுவலமாகச் செயல்பட்டு வருகிறது.

**முடிவுரை**

சமீபத்தில் வெளிவந்த அயோத்தி படத்தின் இறுதிக் காட்சி நெஞ்சை வருடுவதாக இருந்தது. படத்திற்கு மட்டுமல்ல நிஜத்திலும் எங்கள் மாவட்டத்தில் அனைத்து மதத்தினரும் ஒருதாய் பிள்ளையாகவே வாழ்கிறோம். எங்கள் ஊரில் இன்றும் இஸ்லாமிய உறவுகளை நாங்கள் உறவுமுறையோடுதான் அழைக்கிறோம். ஒற்றுமையே பலம்.

**தமிழக இஸ்லாமிய வரலாற்று ஆவணங்கள் – புலவர் செ. இராசு**

# காத்தம் நபியே

# கல்கி அவதாரம்

ஹிந்து சகோதரர்களுக் ஒரு இனிப்பான செய்தி.

ஹிந்துக்களின் வேதாகமத்தில் சொல்லப்படும், கடைசி அவதாரமான கல்கி, இறைத்தூதர் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஆவார். இதை நாம் சொல்லவில்லை, சமீபத்தில் ஹிந்தி மொழியில் வெளிவந்த புத்தகத்தின் சாராம்சமாகும். இந்த நூல் வெளியானபின், இந்தியாவே ஒரு கலங்கு கலங்கி விட்டது என்றால் மிகையல்ல. இதை ஒரு முஸ்லிம் எழுதியிருந்தால், அவர் இந்நேரம் சிறையிலடைக்கப்படடிருப்பதோடு, அந்த புத்தகத்தையும் தடை செய்திருப்பார்கள்.

ஆனால், கல்கி அவதாரத்தைப் பற்றிய இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு, பிரபஞ்ச இறைத்தூதின் வழிகாட்டி என்னும் இந்த புத்தகம், வங்காளத்தில் இருந்து வெளிவந்ததாகும். இது அலஹாபாத் பல்கலைக்கழகத்தில் ஒரு முக்கிய அத்தாட்சியாக இருக்கிறது. இதை எழுதியது, தலை சிறந்த ஆய்வாளரான பண்டிட் வைத் ப்ரகாஷ் என்னும், ஓர் பிராமண சமஸ்கிருத பண்டிட்டாவார்.

பண்டிட் வைத் ப்ரகாஷ், பன்னெடுங்கால கடின ஆராய்ச்சி மற்றும் அயரா உழைப்பில் உருவான இப்புத்தகத்தை, இதே போல் ஆய்வு செய்யும் எட்டு ஹிந்து கல்விமான்களிடம் சமர்ப்பித்து இருக்கிறார். அவர்களும், முழுக்க இப்புத்தகத்தை படித்துணர்ந்து, பலமான ஆதாரங்களினால், இப்புத்தகத்தின் தகவல், முழுக்க முழுக்க உண்மை தான் என்று சான்றளித்துள்ளனர்.

இந்தியாவின் தலைச்சிறந்த வேதங்கள், குறிப்பிடும் தூதரும் வழிகாட்டியுமான கல்கி அவதாரம், மக்காவில் பிறந்த முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்னும் மாமனிதரே ஆவார். ஆதனால், ஹிந்துக்கள், இனியும் கல்கி அவதாரத்துக்காக காத்திராமல், ஆயிரத்து நானூறு வருடங்களுக்கு முன்பு, இவ்வுலகில் உதித்து, இறைத்தூதை எத்தி வைத்து, வாழ்வின் இறுதிவரை இறைப்பணியாற்றிய இறைவனின் கடைசி தூதரை ஏற்று இஸ்லாத்தைத் தழுவ வேண்டும். இவரது ஆராய்ச்சியின் இறையாண்மையை நிரூபிக்க, பண்டிட், தம் வேதத்திலிருந்து தக்க சான்றுகளை முன்வைக்கிறார்.

**சான்றுகள்**

1. வேதங்கள், கல்கி அவதாரம் தான், பகவானின் இறுதித் தூதர் என்கிறது. இது, கடைசி தூதர், முஹம்மதுடைய விஷயத்தில் மட்டுமே சரியாக இருக்க முடியும்.

2. ஹிந்து வேதங்களின் முன்னறிவிப்பின் படி, கல்கி நீரினால் சூழப்பட்ட ஒரு இடத்தில் தான் அவதாரம் எடுப்பார். அது தான் ஜஸீரத்துல் அரப் என்று சொல்லக் கூடய கடலால் சூழப்பட்ட அரேபிய தீபகற்பமாகும்.

3. ஹிந்து புனித நூல்களில், கல்கி அவதாரத்தின் தந்தையை, விஷ்ணு பகத் என்றும் தாயை சொமானிப் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சமஸ்கிருதத்தில் விஷ்ணு என்றால், இறைவன், அதாவது அல்லாஹ் என்று பொருள். அதோடு, பகத் என்றால் அடிமை என்று அர்த்தம். ஆக, விஷ்ணு பகத் என்பது, அல்லாஹ்வின் அடிமை அதாவது அரபியில், அப்துல்லாஹ் என்னும் பதத்தைத் தருகிறது. சொமானிப் என்ற சமஸ்கிருத வார்த்தைக்கு, சாந்தமான அமைதி என்று பொருள். அரபியில் ஆமினா என்ற வார்த்தைக்கும் இதே அர்த்தம் தான். ஆக, இறுதித் தூதர் முஹம்மதின் பெற்றோர் அப்துல்லாஹ் மற்றும் ஆமினா என்பது, உறுதிப்படுகிறது.

4. அதோடு, கல்கி அவதாரம், ஆலிவ் மற்றும் பேரித்தங்கனிகளை உண்டு வாழ்வார் என்றும், வார்த்தை தவறாத நேர்மையாளராக இருப்பார் என்றும் ஹிந்துக்களின் புத்தகங்களில் உள்ளது. ஆக, முஹம்மதின் விஷயத்தில் உண்மையாகிறது என்பதாக பண்டிட் ப்ரகாஷ் எழுதுகிறார்.

5. கல்கி அவதாரம் உயர்ந்து மதிப்பு மிக்க குலத்தில் பிறப்பார் என்று வேதங்கள் சொல்கின்றன. இதுவும், மிக உயரிய, மதிப்புமிக்க குறைஷி குலத்தில் பிறந்ததால், முஹம்மதுடைய விஷயத்தில் சரியாகிறது.

6. கல்கி அவதாரத்துக்கு, ஒரு குகையில் இறைவனின் ஏவலர் மூலமாக ஞானம் கிடைக்கும் என்பதாக வந்துள்ளது. ஆக, மக்காவிலேயே, அல்லாஹ்வின் தூதர் ஜிப்ரீல் மூலமாக ஹீரா குகையில் ஞானம் பெற்றது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஒருவர் தான்.

7. மேலும், கல்கி அவதாரத்துக்கு காற்றின் வேகத்தில் பறக்கும் குதிரை வழங்கப்படுமென்றும், அதன் மூலம் அவர், இவ்வுலகத்தையும், ஏழு வானத்தையும் சுற்றி வருவார் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மிஃராஜ் இரவில், புராக் வாகனத்தில் தூதர் முஹம்மது பயணமானது, இதைத்தானே சொல்கிறது?

8. அதோடு, கல்கி அவதாரத்துக்கு இறைவனின் உதவி உண்டு. இவை யாவும் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தவிர வேறு எவரைக் குறிப்பிடுகிறது?

9. மேலும் சில விஷயங்கள் வேதங்களில் குறிப்பிடப்படுகின்றன. அதாவது, கல்கி அவதாரம், குதிரையேற்றத்திலும், அம்பெய்துவதிலும், வாள் பயிற்சியிலும் சிறந்து விளங்குவார்... இந்த இடத்தில், பண்டிட் வைத் ப்ரகாஷ் என்ன சொல்கிறார் என்பது, அதி முக்கியமான, கவனத்தில் கொள்ளத் தக்க விஷயமாகும். அதாவது, குதிரை, வாள் மற்றும் ஈட்டிகளின் காலம் வெகு நாட்களுககு முன்பே போய் விட்டது, தற்போது, நவீன ஆயுதங்களான, துப்பாக்கிகள், பீரங்கிகள், ஏவுகணைகள் என போர்முறை முற்றிலும் மாறி விட்டது.

அதனால், வாளுடனும் வில்லுடனும் போராடக்கூடிய கல்கி இனிமேல் அவதாரமெடுப்பார் என்று இனியும் நம்பிக்கொண்ருப்பதுஅர்த்தமற்றது.

உண்மையில், வேதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் கல்கி அவதாரம் என்பது, புனித குர்ஆன் வழங்கப்பட்ட தூதர் முஹம்மதேயன்றி வேறில்லை என்பது மிகத் தெளிவாக தெரிகிறது.

பேராசிரியர். பண்டிட். வைத் ப்ரகாஷ் எழுதியதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தது மீர் அப்துல் மஜீத். தமிழ் மொழி பெயர்ப்பு சகோதரி ஸுஹைனா (சுமஜ்லா)

---

## உள்ளமைச் சூரியனோ யாஸீன் உருவாய் உதிக்கிறதே!

அகவை நான்கினிலே அருள்மறையாம் குர்ஆன் முடித்தீரே (2)
அவ்ன் என்னும் பள்ளியில் அகமியம்..
அடக்கம் அமரருள் உய்க்கும் அருங்குணம் ... (அகவை நான்கினிலே)

கருணை யாஸீன் கண்மணி நீரே
கலீல் அவ்ன் நாதர் வழி நடப்போரே
கல்பில் நிறைந்தோரே
குரு யாஸீன் குணங்களும் கொண்டோரே
நீர் இல்லாமல் எது நிம்மதி
நீர்தான் இனியும் எம் சந்நிதி! (அகவை நான்கினிலே)

குரலின் ஒலியோ கலீல் அவ்ன் நாதர்
குணநலம் அனைத்தும் கலீல் அவ்ன் நாதர்
உள்ளமைச் சூரியனோ யாஸீன் உருவாய் உதிக்கிறதே
அலியின் மகன்கள் நபித் தோற்றமே
யாஸீன் அலியோ நீங்கள் அவ்ன் தோற்றமே! (அகவை நான்கினிலே)

*ஆக்கம் செய்யிது முஃபீல் மௌலானா. திருமுல்லைவாசல்.*
*பாடியவர்: செய்யிது ஹஸன் மௌலானா.*

# சற்குரு சரித்திரம் 5

(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)

ஜமாலிய்யா அஸ்செய்யிது கலீல் அவ்ன் மௌலானா நாயகம் பள்ளி படிக்கும் போது தங்கள் அருமைத் தந்தையார் ஜமாலிய்யா அஸ் செய்யிது யாஸீன் மௌலானா அவர்களிடம் அதுவேண்டும் இது வேண்டும் என்று எதையும் கேட்க மாட்டார்கள். தந்தையார் வாங்கிக் கொடுப்பதையே அப்படியே அணிந்து கொள்வார்கள். அதன்படி தந்தையார் வாங்கிக் கொடுத்த இரண்டு சாரங்கள் (கைலிகளும்) ஒரு இரண்டு மூன்று சட்டைகளும் தான் பள்ளிச் செல்லும் போது அவர்களது உடுப்புகள்.

அப்படி இருக்கும் போது ஒருநாள் வீட்டு வாசலில் ஏழைப் பையன் ஒருவன் தன் பெற்றோர்களுடன் வந்து யாசகம் கேட்டான். அவனைப் பார்த்து இரக்கம் கொண்ட நமது சற்குரு நாயகம் ஓடிச் சென்று தம்மிடம் உள்ள சாரம் ஒன்றை (ஒன்றுமட்டும் தான் இருந்தது) எடுத்த வந்து அந்த ஏழைப் பையனுக்குக் கொடுத்து விட்டார்கள்.

மகன் ஒரே சாரத்தையே தொடர்ந்து கட்டியிருப்பதைக் கவனித்து விட்டார்கள் தந்தை நாயகம். மகனை அருகில் அழைத்து மகன் உங்களிடம் இரண்டு சாரங்கள் இருந்ததே. ஏன் ஒன்றைமட்டும் தொடர்நது கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார்கள். சிறுவர் சற்குரு நாயகம் அவர்கள் தந்தையிடம் நடந்ததைக் கூற அதற்கு அருமைத் தந்தை நாயகம், மகனே எதுவும் தனக்குமிஞ்சி தான் தானம் தருமம் எல்லாம் என்றார்கள். பிறகு தம் மகனாருக்கு வேறு ஒரு சாரம் வாங்கிக் கொடுத்தார்கள்.

நம் சற்குரு நாயகம் அவர்களுக்கு ஒரு வைராக்கியம் இருந்தது. அதாவது, பள்ளி இறுதி ஆண்டில் வரும் தேர்வை ஆங்கிலத்தில் எழுதி பாஸ் செய்த பின் தான் பேண்ட் (முழக்கால் சட்டை) அணிவது என்பதே அது. அதன்படியே பள்ளி இறுதி ஆண்டு வரை சாரம் கட்டிக் கொண்டுதான் பள்ளிக்குச் சென்றிருக்கிறார்கள்.

பள்ளி இறுதி ஆண்டும் வந்தது. முதல்வரிடம் சென்று, இந்த இறுதி ஆண்டுத் தேர்வை நான் ஆங்கிலத்தில் எழுதுகிறேன் என்பதாகக் கேட்டார்கள். அதற்கு அந்த முதல்வர் முடியாது தமிழ் வழியில் தான் எழுத வேண்டும் என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டார். அந்த முதல்வர் பெயர் வபா இவரை அந்த வேலையில் சேர்த்து விட்டதே நமது சற்குரு நாயகம் அவர்களின் தந்தை நாயகம் தான். அப்போது கல்வி அமைச்சராக இருந்தவர் பதீவூத்தீன் என்பவரிடம் சொல்லி இவ்வேலையை அந்த வபா மாஸ்டருக்கு வாங்கிக் கொடுத்தார்கள்.

நமது சற்குரு நாயகம் கண்ணிய மிக்க யாஸீன் மௌலானா அவர்களின் மகனார் என்று தெரிந்திருந்தும் பிடிவாதமாக மறுத்து இருக்கிறார். வேறு வழியின்றி அந்த முறை பள்ளி இறுதித் தேர்வை தமிழ் வழியிலேயே திறம்பட எழுதி வெற்றியும் பெற்றார்கள் நம் சற்குரு நாயகம் அவர்கள்.

தம்முயற்சியை விடவில்லை, தாமாகவே முயன்று அடுத்த முறை அதே பள்ளி இறுதித் தேர்வை ஆங்கில வழியில் எழுதி வெற்றியும் கண்டர்கள்.

அதன்பின் தங்களின் பெரிய சகோதரர்கபைப் போன்றே ஆசிரியர் பயிற்சிக் கல்வியில் சேர்ந்தார்கள். அதோடு புலவர் பட்டத்திற்கான படிப்பையும் படித்து புலவர் பட்டத்தையும பெற்றார்கள். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நம் சற்குரு நாயகம் அவர்களுக்கு மிகவும் நெருக்கமான உறவினர் ஒருவரும் அவர்களுடன் அதே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்து வந்தார். அவர் தம்மோடு அவரைப் போன்றே குணமுள்ள மாணவர்களைச் சேர்த்துக் கொண்டு நம் சற்குரு நாயகம் அவர்களுக்கு இடையறாத தொல்லைகள் செய்து வந்தார். அதையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் நம் சற்குரு நாயகம் கல்வி கற்பதிலேயே கவனம் செலுத்தினார்கள். இது அவர்களுக்கு மேலும் எரிச்சலை உண்டாக்கியது. அந்தக் கல்லூரியில் நம் சற்குரு நாயகம் அவர்களை மௌலானா என்றே அழைப்பார்களாம்.

ஒரு சமயம் நம் சற்குரு நாயகம் எழுதிய கவிதைத் தாளை கையில் பிடித்துக் கொண்டு அங்கு தமிழ்ப் பேராசிரியராக இருந்த வித்வானிடம் சென்று காட்டி “இதில் பிழையுள்ளது என்பார்களாம். உடனே வித்வான் அதை கையில் வாங்காமலேயே அது யார் எழுதியது என்பாராம், மௌலானா என்றதும் போங்க... போங்க... மௌலானா எப்படி கவிதை எழுதுவார் என்பது எமக்குத் தெரியும் என்று ஆவேசமாகக் கூறி அவர்களை விரட்டிவிடுவார்களாம். இதுவும் கைகூடவில்லையே வேறு என்ன இடைஞ்சல் செய்யலாம் என்று யோசிப்பார்களாம். கல்வி இறுதி ஆண்டு வரை இப்படி இவர்கள் நம் சற்குரு நாயகம் அவர்களுக்கு ஏதாவது இடைஞ்சல் செய்வதும் அவை யெல்லாம் படுதோல்வியில் முடிவதும் வாடிக்கையாகி விட்டது.

ஒருவாறாக நம் சற்குரு நாயகம் தமிழில் சிறந்த புலமை பெற்று ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் இறுதியாண்டு தேர்வு எழுதி தேர்ச்சியும் பெற்று விட்டார்கள்.

வெலிகாமத்தில் அவர்கள் பயின்ற பள்ளியிலேயே அதாவது அறபா தேசிய பாடசாலையிலேயே நம் சற்குரு நாயகம் அவர்களுக்கு வேலையும் கிடைத்தது. ஏற்கனவே இவர்களின் இரண்டு மூத்த சகோதரர்கள் இருவரும் அங்கு

ஆசிரியராகப் பணி புரிந்து வருகிறார்கள். இடையில் நம் சற்குரு நாயகம் அவர்களின் சின்ன அண்ணன் அவர்களுக்கு கொழும்புவிற்கு மாற்றல் ஆகி விட்டது.

நம் சற்குரு நாயகம் ஆரம்பத்தில் மாண்டிசேரி என்ற எல்.கே.ஜி.என்று நாம் அழைக்கும் பாலர் வகுப்பிற்குத்தான் பயிற்றுவிக்கச் சென்றார்கள். அதையும் மிகுந்த ஆர்வத்துடனும் குழந்தைகளிடம் அதீத பாசத்துடனும் தங்கள் ஆசிரியர் பணியைத் தொடங்கினார்கள்.

பின்னர் படிப்படியாக தமிழ், ஆங்கிலம் ஆசிரியராக பள்ளி இறுதி ஆண்டுவரை பாடம் கற்பித்தார்கள் அவர்கள் வகுப்பு என்றால் வகுப்பு நிசப்தமாக இருக்கும். மாணவர்களைக் கவரும் வகையிலும் சொல்லிக் கொடுப்பார்கள் அப்படி பாடம் நடந்து கொண்டு இருக்கும்போது அருகில் உள்ள வகுப்புக்கு ஆசிரியர் வர தாமதம் ஆனதால் அந்த வகுப்பு மாணவர்கள் ஒரே கூச்சல்போட்ட வண்ணம் இருந்தார் கள். இது நம் சற்குரு நாயகம் அவர்களுக்கு பாடம் நடத்த இடையூறாக இருந்தது. நேரே அடுத்த வகுப்புக்குச் சென்றார்கள். இரண்டு பேரைப் பிடித்து இழுத்து கன்னத்தில் பளார் என்று அறைந்தார்கள். அவ்வளவுதான் அந்த வகுப்பு கப்சிப் என்று அடங்கி போனது. மீண்டும் இவர்கள் வகுப்பிற்குச் சென்று பாடத்தைத் தொடர்ந்தார்களாம். *(வரலாறு மணக்கும்)*




மதுரையில் நடைபெற்ற ஆயத்த ஆடைகள் சங்க மாநாட்டில் விஜய் டி.வி புகழ் கோபி நாத் அவர்களுக்கு ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை செயலாளர் யாஸீன் அவர்கள் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் ஆக்கிய உமர் ரலி புராணம் காவிய நூலை வழங்கினார்.

# தர்ஹாவிற்கு ஆதரவளித்து மதுரை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

இஸ்லாம் மார்க்கத்தை மக்களிடையே பரப்பிய முஸ்லிம் பெரியவர்களின் நினைவிடங்கள் தர்ஹா எனப்படுகின்றன.

இஸ்லாமியப் பாடகர் காயல் ஷேக்முஹம்மது பாடிய தமிழகத்தின் தர்ஹாக்கள் என்னும் பாடலில் தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான தர்ஹாக்களின் ஊர்ப் பெயர்களை குறிப்பிட்டு பாடியுள்ளார்.

முஸ்லிம்கள் கொண்டாடும் பண்டிகைகள் என்றால் அது ரமலான் மற்றும் ஹஜ் மாதங்களில் கொண்டாடப்படும் இரு பெருநாட்கள் ஆகும். இவை தவிர இறைத்தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறந்த மாதமான ரபீஉல் அவ்வலில் மீலாதுன் நபி நிகழ்வு கொண்டாடப்படுகிறது.

தர்ஹாக்கள் உள்ள பகுதியில் அந்த நினைவிடத்தில் அடங்கியுள்ள முஸ்லிம் பெரியாரின் நினைவு நாள் உர்ஸ் எனப்படும் கந்தூரி விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் முஹர்ரம் மாதத்தின் முதல் பத்து நாட்களில் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டம் ஏர்வாடியில் ஹசன் – ஹுசைன் தர்ஹாவில் மேள தாளங்களுடன் கொடியேற்றம், சந்தனக்கூடு மற்றும் குதிரை பஞ்சா ஊர்வலம் பல ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. (தென்காசியிலும் நடைபெற்று வந்த நிகழ்வு சில காரணங்களால் இப்போது நடக்கவில்லை)

இந்த முஹர்ரம் திருவிழா இஸ்லாம் மார்க்கத்திற்கு எதிரானது என்றும் இந்த ஊர்வலங்களைத் தடை செய்ய வேண்டும் என்றும் அந்த ஊரிலுள்ள தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பு தெரிவித்த எதிர்ப்பின் காரணமாக இருதரப்பினரிடையே சமாதான ஒப்பந்தம் போடப்பட்டு சந்தனக் கூடு மற்றும் குதிரை பஞ்சா ஊர்வலங்கள் நடைபெறவில்லை. தர்ஹா நிர்வாகம் தொடர்ந்து நீதிமன்றம் மூலம் விழா நடத்த முயற்சித்து வந்துள்ளது.

இந்த வழக்கு மதுரை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், காலம் காலமாக நடைபெற்று வந்த ஒரு நிகழ்ச்சியை பாதுகாப்பு காரணங்களுக்காக தடை செய்ய முடியாது. முஹர்ரம் திருவிழாவை தர்ஹா நிர்வாகம் மேள தாளங்களுடன் சந்தனக்கூடு மற்றும் குதிரை பஞ்சா ஊர்வலம் நடத்த அனுமதி. மாவட்ட நிர்வாகம் அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு.

நீதிபதி சுவமிநாதன் அளித்த தீர்ப்பில் பல விஷயங்களை சுட்டிக் காட்டி இந்த அனுமதியை வழங்கியிருக்கிறார். இந்த வழக்கின் எதிர் மனுதாரரான தவ்ஹீத் ஜமாத்தின் நிலைப்பாடடை அவர் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தவ்ஹீத் ஜமாஅத் தங்களுக்கென தனிப் பள்ளிவாசல் தனி ஜமாத் என்று வைத்துள்ளது. தர்ஹா போன்றவற்றில் அவர்களுக்கு உடன்பாடு இல்லை. தங்கள் கொள்கைகளை மற்றவர்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர்கள் பிறரை கட்டாயப்படுத்த முடியாது. முஹர்ரம் திருவிழா நடைபெறுவதில் உடன்பாடு இல்லையெனில் அதில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி வீட்டுக்குள் இருந்து கொள்வது நல்லது.

இதைக் காரணம் காட்டி சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று மாவட்ட நிர்வாகம் தங்கள் பொறுப்பை தட்டிக் கழிப்பது ஏற்புடையதில்லை. எனவே தர்ஹா நிர்வாகம் எப்பேதும் போல் முஹர்ரம் விழாவை மேள தாளங்களுடன் சந்தனக்கூடு மற்றும் குதிரை பஞ்சா ஊர்வலங்களுடன் நடத்திக் கொள்ளலாம் என்று அனுமதி வழங்கி தீர்ப்பாகியுள்ளது.

மதரீதியான சீர்திருத்தப் பிரச்சாரங்கள் எப்போதும் மக்களின் மனங்களை நேர்வழியின் பால் ஈர்ப்பதாக இருக்க வேண்டுமே தவிர கட்டாயப்படுத்தி பிரச்சினைகளை ஏற்படுத்தி உருவாக்கப்படும் மாற்றங்கள் அனைத்தும் தற்காலிகமானவையே என்பதை இது போன்ற சீர்திருத்த அமைப்புகள் புரிந்து கொள்ள வேண்டும்.

---

■ *உங்களுக்கு மதிப்பில்லை என நீங்கள் உணரும் இடத்தில் மௌனமாக இருக்கப் பழகுங்கள். காலப்போக்கில் உங்கள் மௌனம் அதற்கான மதிப்பைத் தரும்.*

■ *தயங்குபவர்களுக்கும் பயப்படுபவர்களுக்கும் யோசிப்பவர்களுக்கும் இந்த உலகில் எதுவும் சாத்தியமில்லை. துணிவும் முயற்சியும்தான் முதற்படி.*

■ *வாழ்வில் நாம் முன்னேற வேண்டுமென்றால் நாம் விட்டுச் செல்ல வேண்டியது கால்தடங்களை மட்டுமல்ல. ஏளனம், எதிர்பார்ப்பு, அவமானம், சில துரோகங்களையும்தான்...!* *–புத்தர்–*

# பல்லக்கு தம்பி வலீ(ரஹ்)

*(கலீபா. எம். சிராஜுதீன் பி.எஸ்.சி ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி.)*

ஓர் அருட் பேரவை கூடியுள்ளது. அங்கு ஆன்றோர்களும், சான்றோர்களும், அறிஞர்களும், மார்க்க மேதைகளும் குழுமியுள்ளார்கள். அதிலே சுந்தர பாண்டியன் பட்டினம் என்ற ஊரின் மாபெரும் மார்க்க மேதை முஹம்மது முஸ்தபா ஆலிம் அவர்களும் வீற்றிருந்து கவிதை மழை பொழிந்து கொண்டிருக்கிறார்கள். அது கேட்டு அங்கு நடுநாயகமாக அமர்ந்திருக்கும் ஒரு முதியவர் புன்முறுவல் பூத்த வண்ணம் அமர்ந்திருக்கிறர்கள். அப்பொழுது மக்கள் மகிழ்ச்சி பொங்க.

சோபனம் வ மர்ஹபா சோபனம் வமர்ஹபா

சோபனம் வ மர்ஹபா அஹ்லன் பல்லக்குவலீ

என்ற பல்லவியை பாடி பரவச முறுகின்றனர்

முஹம்மது முஸ்தபா ஆலிம் புலவர் அவர்கள் மீண்டும் கவியைத் தொடங்கி..

கடல் மீது கப்பலின்றிக் கால் நடையாய் நடந்து வந்த காமிலே யா ஷைகுனா ஸனதீ வபல்லக்கு வலீ....

என்று பாடுகிறார்கள் அப்போது அங்குகூடியிருந்த மக்களின் உணர்ச்சி உச்சத்தை அடைகிறது. நடுவில் வீற்றிருக்கும் முதியவர் கையில் தஸ்பீஹ்மணியை உருட்டிய வண்ணம் உட்கார்ந்திருக்கிறார்கள்.

இவர்கள் யார் என்று தானே அறிய ஆவல். இவர்கள் தான் பல்லக்குதம்பி வலீயுல்லா (ரஹ்) ஆவார்கள். இப்போது இவர்களைப்பற்றிய வரலாறைத்தான் பார்க்கப் போகிறோம்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உயிர்த் தோழர் முதலாம் கலீபா. அபூபக்கர் (ரலி) அவர்களின் வழியில் இருபத்து நான்காம் தலைமுறையில் தோன்றிய சையிது இஸ்மாயில் என்ற பெரியோர் காயலம்பதியில் ஒழுக்கமான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு நூர் முஹம்மது என்ற மகன் பிறக்கிறார்கள். அவர்களுக்கு வயது வந்தபின் காயல்மாபதியை விட்டு கீழக்கரைக்கு வந்து குடியேறி வாழ்ந்து வருகிறார்கள்.

அப்பொழுது தொண்டியில் அடக்கம் பெற்றுள்ள குதுபுஸ்ஸமான் ஷெய்கு அபூபக்கர் (ரலி) அவர்களின் திருமகனார் லெப்பைக் கனி ஆலிம் சாஹிப் அவர்களின் மகன் வயிற்றுப் பேத்தி பாத்திமா அவர்களை மணமுடிக்கின்றார்கள்.

அவர்களின் இல்லறச் சோலையில் அருமையான வாசம் வீசும் மலராக ஓர் ஆண் மகவும் பிறக்கிறது. அவர்களுக்கு ஹபீபு முஹம்மது சதக்கத்துல்லாஹ் என்ற அழகிய பெயரிட்டு மகிழ்கிறார்கள்.

மகனார் பிறந்து மூன்று ஆண்டுகளுக்குள் தந்தை நூர் சாஹிபு காலமாகி விடவே பிள்ளையைப் பேணி வளர்க்க வேண்டியப் பொறுப்பு தாயாருக்கு ஏற்படுகிறது. பிள்ளை கல்வி பெற வேண்டி மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் நடத்திவரும் மதரஸா அரூஸ்ஸியாவுக்கு அனுப்பிவைக்கிறார்கள். பிள்ளைக்கு 10 வயது நிரம்பும் போது குர்ஆன் முழுவதையும் ஓதி அதை மனனமும் செய்து விட்டார். அங்கேயே தொடர்ந்து ஓதி மார்க்க கல்வியை பூரணமாக படித்து முடித்தார்கள். மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் இவர்களின் அறிவையும் ஆற்றலையும் கண்டு வியந்து இவர்களை ஃபலாஹ் தம்பி (வெற்றியாளரே) என்று அன்புடன் அழைத்தார்கள்.

இவ்வாறு அழைத்ததோடு அவர்களுக்கு காதிரிய்யா தரீக்காவில் தீட்சையும் கொடுத்தார்கள்.

மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் அன்பாக ஃபலாஹ் தம்பி மருவி பிற்காலத்தில் பல்லாக்குத் தம்பி என்று ஆனது.

(என்றாலும் சிலர் வேறு விதமாய்க் கூறுகிறார்கள். இவர்களுக்கு பல கடைகள் இருந்ததாகவும் அவற்றிற்குப் போய்வர வீட்டில் பல்லாக்கு இருந்ததாகவும் அதில் இவர்கள் ஏறி பயணிக்க மிகவும் விரும்புவார்கள் எனவும் கூறப்பட்டது. அதனாலேயே இவர்களுக்குப் பல்லாக்கு தம்பி என்ற பெயர் வந்தததாகவும் கூறுவதுண்டு.)

இவர்களுக்கு 23 வயது நிறைவு பெற்றது. இவர்களது ஆசான் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் சாஹிபு அவர்கள் ஹஜ்ஜுக்குப் பயணமானார்கள். இவர்களும் அவர்களுடன் பயணித்து விட்டார்கள். ஹஜ்ஜை முடித்துக் கொண்டு திருமதீனா நகர் வந்து அண்ணல் நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மனம்குளிர தரிசனம் செய்துவிட்டு அப்படியே தமது ஆசானுடன் ஈராக், சிரியா, எகிப்து, பாலஸ்தீன் ஆகிய நாடுகளுக்கும் சென்று அங்கு அடங்கப் பெற்றிருக்கும் நபிமார்கள் வலீமார்களை யெல்லாம் ஜியாரத் செய்து விட்டு ஊர் திரும்பினார்கள்.

மேலும் அந்நாட்டிலுள்ள ஆன்மிக சான்றோர்களையும் சந்தித்து உரையாட தவறவில்லை.

(பெரும்பாக்கியம் பெற்றவர்கள் இம்... இது என் பெருமூச்சு.

இவர்கள் தங்களின் 24 ஆவது வயதில் வள்ளல் ஹபீபு முஹம்மது மரைக்காயரின் வழிவந்த மங்கை நல்லாள ஆயிஷா உம்மாவை மணம் முடித்தார்கள். ஆனல் அவர் மணம் முடித்து மூன்று மாதங்களிலேயே இறப் பெய்தி விட்டார்கள். அதன் பின் மூன்று ஆண்டுகள் கழித்து முதல் மனைவியின் தங்கை சையிது முஹம்மது நாச்சியாரை இரண்டாவதாக மணமுடித்தார்கள். இவர்களுக்கு ஒரு ஆண்மகவு பிறக்கிறது. அக்குழந்தைக்கு சையிது முஹம்மது என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

பின்னர் தமது வகுப்புத் தோழர் சையிது அப்துல் காதிர் என்ற கல்வத்து நாயகம் அவர்களுடன் சேர்ந்து இலங்கைக்குச் சென்றார்கள் அங்கு மார்க்கப் பிரச்சாரங்களில் ஈடுபட்டார்கள். இந்தியா திரும்பியவுடன் கல்வத்து நாயகம் தம் வீட்டில் கல்வத்து இருக்கத் தொடங்கிவிட்டார்கள். இவர்கள் காட்டிற்குச் சென்று கடும் தவம் புரிந்தார்கள். மீண்டும் தங்கள் வீட்டிற்கு வந்து " முர்ஷிதுத்துல்லாப்" என்ற நூலைப் படித்துப் படித்து இன்பமுற்று அதை ஆராயவும் தொடங்கினார்கள். அதனால் அவர்கள் அறிவு பட்டை தீட்டப்பட்ட வைரம் போல் ஜொலிக்கத் தொடங்கியது பல உயரிய ஆன்மீகப் படித்தரங்களில் இவர்கள் அடியெடுத்து வைத்தார்கள். அவர்கள் அறிவு விசாலமாகிக் கொண்டே போனது. இறைவனும் இவர்களுக்கு விலாயத்தைத் தந்தான். அதனால் அவர்கள் பல கராமத்துகளை நிகழ்த்திக் காட்டினார்கள்.

ஒரு தடவை தம் ஊரில் உள்ள ஓடக்கரையில் நடந்த மௌலிது விழாவில் கலந்து கொண்டு மௌலானா குரல் எழுப்பி ஓதினார்கள். இடையிடையே இதை ஓதவும் அதை ஓதவும் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். இ வ ர் க ளி ன் குறுக்கீடு மற்றவர்களுக்குப் பிடிக்கவில்லை அதனால் அவர்களை நேர்சைகள் வைக்கப்பட்ட அறையில் தள்ளி பூட்டிவிட்டார். மௌலிது ஷரீபை ஓதி முடித்தபின் நேர்சை அறையைத்திறந்து பார்த்தால் அங்கே பல்லக்கு தம்பி அவர்களைக் காணவில்லை, இவ்வதிசயத்தைச் சொல்லி வீதிக்கு ஓடிவந்த போது தெருவில் பல்லக்கு தம்பி அவர்கள் புன்சிரிப்புடன் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். இதைக் கண்ட கேட்ட அனைவருக்கும் பெரிய அதிசயமாக இருந்தது. நாம் இதுநாள்வரை இவர்களை புரிந்துகொள்ளவில்லையே என்று மனவேதனை அடைந்தனர். அன்று முதல் "பல்லக்கு வலீ" என்றே அவர்களை மக்கள் அழைக்கத் தொடங்கினர்.

# ஒரு சிறிய மாநிலத்திலிருந்து ஒன்பது முஸ்லிம் எம்.பி.க்களா? அலறும் சங்க பரிவாரங்கள்...

வெறும் இருபது பாராளுமன்ற தொகுதிகளைக் கொண்ட கேரள மாநிலத்திலிருந்து முஸ்லிம் சமூகத்தை சேர்ந்த மூன்று பேர் பாராளுமன்ற அவையிலும், ஆறு பேர் ராஜ்யசபாவிலும் பிரதிநிதிகளாக இருப்பது கேரள மாநில அரசியலைப் பொறுத்தவரை சாதாரண விஷயம்.. ஆனால் ஒன்பது முஸ்லிம்கள் எம்.பி பதவி வகிப்பதை எலெக்ஷன் ஜிஹாத் என்று சங்க பரிவாரங்கள் புலம்பி வருகின்றனர்..

நடந்து முடிந்த 18 ஆவது பாராளுமன்ற அவைக்கான தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் வடகரா தொகுதியில் போட்டியிட்ட ஷாபி பரம்பில் அபார வெற்றி பெற்றார்.. அதுபோலவே முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் மலப்புரம் தொகுதியில் பேட்டியிட்ட இ.டி. முஹம்மது பஷீர், பொன்னாணி தொகுதியில் போட்டியிட்ட மவுலவி அப்துல் ஸமது சமதானியும் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகினார்..

கேரள மாநிலத்திலிருந்து காலியாகும் ராஜ்யசபா பதவிகளுக்கு சுழற்சி முறையில் சமுதாய பிரதிநித்துவம் வழங்கப்படுவது காலங்காலமாக கடைபிடிக்கப்படும வழக்கமாகும்.. அந்த வகையில் கடந்த இரண்டு வருடங்களில் காலியான இடங்களுக்கு வேட்பாளர் அறிவித்ததில் தகுதியும் திறமையும் கட்சிப்பணி அனுபவம் உள்ளவர்கள்தேர்வு செய்யப்பட்டதில் முஸ்லிம் சமூகத்தை சேர்ந்தவர்கள் வெவ்வேறு கட்சிகளின் ஆறு பேர் ஒரே சமயத்தில் ராஜ்யசபா உறுப்பினராகி யுள்ளனர்...

றஹீம், இளமரம் கரீம் ஆகியோர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பிலும், பி.பி.சுனீர் இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பிலும், ஹாரிஸ் பீரான், பி.வி. அப்துல் வஹாப் ஆகியோர் முஸ்லிம் லீக் கட்சியின் சார்விலும், ஜெபி மேத்தர் காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் கேரள மாநில பிரதிநிதிகளாக ராஜ்யசபாவில் பணியாற்றி வருகின்றனர்..

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் எப்படியும் ஐந்து தொகுதியில் வெற்றி பெற பாஜக பெரும் முயற்சிகள் செய்த போதும் திருச்சூர் தொகுதியில் கிறிஸ்தவ சபைகள் ஆதரவுடன் சுரேஷ்கோபி மட்டுமே வெற்றி பெற்றது சங்க பரிவாரங்கள்

மத்தியில் முஸ்லிம்கள் மீதான கோபத்தை அதிகரித்துள்ளது... போன்றவர்கள் பகிரங்கமாகவே முஸ்லிம் வெறுப்பை உமிழ்ந்து தங்கள் வார்த்தைகள் மூலம் வெளிப்படுத்தினர்.. ஏற்கனவே லவ் ஜிஹாத் துவங்கி வெவ்வேறு வடிவங்களில் வெறுப்பை விதைப்பவர்கள் இப்போது 9 எம்.பி விவகாரத்தை எலெக்ஷன் ஜிஹாத் என்று குமுறி வருகின்றனர்..

கேரள மாநிலத்தில் ஒன்பது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை. தமிழக முஸ்லிம் அரசியல் இயக்கத் தலைமைகள் சிந்திக்க வேண்டிய விஷயம் கூட..

## சபைகள் தோறும் சங்கைமிகு கர்பலா நினைவு நாள்!

**முஹர்ரம் கர்பலாஆஷூரா தினத்தை முன்னிட்டு ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை, தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா சார்பில் உலகெங்கும் வாழும் முரீதுகள் புனித ஹஸனைன் மௌலிது ஓதி கந்தூரி கொடுத்து இமாம் ஹஸன் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா மற்றும் அஹ்லுபைத்தினரின் மேன்மைகள் சிறப்புகள் பற்றி பயான் செய்து சிறப்பு மஜ்லிஸுகள் நடாத்தினர்.**

♦ சிங்கப்பூரில் நடைபெற்ற மஜ்லிஸில் சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் தலைமைதாங்கிக் கலந்து துஆ செய்தார்கள்.

♦ துபையில் மதுக்கூர் முஹம்மது சாதிக் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற மஜ்லிஸில் சங்கைமிகு மௌலானாக்கள் முன்னிலை வகிக்க, கலீபா. ஏ.பி. சஹாப்தீன் பி.இ. எம்.பி.ஏ. ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் தலைமையில், ஸெய்யித் அலி மௌலானா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், கே.எஸ்.ஷாஜஹான் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் , கலீபா. பொறியாளர் எம்.ஜே. முஹம்மது இக்பால் பி.இ. எம்.பி.ஏ. ஆகியோர் நெகிழ்ச்சியுரை நிகழ்த்தினார்கள்.

முன்னதாக சத்தார்கான் யாஸீனிய் கிராஅத் ஓதிட, மதுக்கூர் வாத்தியார் சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் வஹ்தத்துல் வுஜூத் இசைக்க, அபுதாபி ஜுபைர் ஹக்கிய்யுல் காதிரிய் தமிழுரை செய்ய, அஜ்மான் இப்ராஹீம் ஹக்கிய்யுல் காதிரிய் பாடல் இசைத்தார். அனைவருக்கும் கந்தூரி உணவு வழங்கப்பட்டது.

♦ பெரம்பலூர் பைதுர்ரஹ்மாவில் நடைபெற்ற நிகழ்வில் மௌலவி. ஜி.ஷர்புத்தீன்ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய் யாஸீனிய், டாக்டர். ஆசிக் அலி ஹக்கிய்யுல் காதிரிய் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர்.

## முஸ்லிம்கள் ஏன்

# இன்ஷா அல்லாஹ் எனக் கூறுகிறார்கள்?

**(கவிஞர் வைரமுத்து ஒரு விழாவில் ஆற்றிய உரை)**

வெற்றியும், தோல்வியும் வாழ்க்கையின் இரு பக்கங்கள். நாம் நினைத்தபடி எல்லாம் நடந்துவிட்டால், எதிர்பார்த்ததெல்லாம் கிடைத்துவிட்டால் அதுவே பெரும் வெற்றி என்று நினைக்கிறோம்.

மாறாக, நாம் நினைத்தபடி நடக்காமல் போனாலோ, அல்லது எதிர்பார்த்தது கிடைக்காவிட்டாலோ அது நமக்குப் பெரும் தோல்வியாகக் கருதுகிறோம். மனம் சோர்ந்து போகிறது. நாம் வெற்றி பெறாமல் தோல்வியடைந்து விட்டதைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்ற மனக்கவலைக்கு ஆளாகிறோம். இதனால் அவமானத்தில் கூனிக்குறுகி அவதியுறுகிறோம்.. நினைத்ததெல்லாம் நடந்துவிடும் என்றோ, எதிர்பார்த்தபடி எல்லாம் கிடைத்துவிடும் என்றோ நாம் நினைக்கிறோம். இதை வைத்தே வெற்றியை நிர்ணயிக்கிறோம். அந்த வெற்றி நமக்குக் கிடைக்கவில்லை என்றால் அதை நமது தோல்வியாகக் கருதுகிறோம்.

இது நமது எண்ணப் போக்கில் உள்ள கோளாறு. வெற்றி பெறவேண்டும் என்று எண்ணுவது தவறல்ல, அதற்காக முயற்சிப்பதும் தவறல்ல. ஆனால், கிடைக்காவிட்டால் தோல்வியாக ஏன் கருத வேண்டும்?

தோல்வியே நமது வெற்றிக்கான அடிப்படை என்று ஏன் நினைக்கக் கூடாது. Failure are the Stepping Stones for the Process என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு.

குஜராத்தி சேட்டுகளிடம் ஒரு நல்ல பழக்கம் உண்டு. இந்தியாவின் பல மாநிலங்களில் அவர்கள் தொழில் செய்து வெற்றிகரமாக வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் கண்ணாரக் காண்கிறோம். ஏதாவது ஒரு தொழிலில் நஷ்டம் ஏற்பட்டால் சற்றும் கவலைப்படாமல், தம் குடும்பத்துடன் புலம் பெயர்ந்து வேறோர் இடத்தில் புதிதாகத் தொழில் தொடங்கி வாழ்வார்கள். சிறியளவில் தொழில் துவங்கி நடத்தும் தொழில் அதிபர் தான் தோல்வி கண்டு துவண்டு போவார். பெரிய தொழில் அதிபர்கள் பரவலாகப் பல தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதால், ஒன்றில் இழந்ததை மற்றொன்றில் ஈடுகட்டிக் கொள்வார்கள். தோல்வியை அவர்கள் புத்திக் கொள்முதல் என்று சர்வ சாதாரணமாக எடுத்துக் கொள்வார்கள். இதனால்தான் அவர்களால் தொழில் துறையில், பல போட்டிகளுக்கு இடையே நிலைத்து நிற்க முடிகிறது.

வெற்றியும், தோல்வியும் நம் வாழ்க்கையில் மாறி மாறி வருவது சகஜமே. வெற்றி மேல் வெற்றி பெற்று வந்த அர்ஜுனன் – குருசேத்திரப் போரின்போது சோர்ந்துதான் போகிறான். உடனே அவனுக்கு கண்ணன் அறிவுரை கூறி அவனது இந்த மனச்சோர்வைப் போக்கி தொடர்ந்து போராடும்படி, கடமையை ஆற்றும்படி அறிவுறுத்தியதே கீதையாகும். விஜயன் என்ற வெற்றி திருநாமத்தைத் தன் பெயராகக் கொண்டிருந்த அர்ஜுனன் திடீர் மனச்சோர்வைக் கண்ணன்தான் போக்கி அருளினார்.

ஒருவேளை வெற்றி பெரும் தோல்வி அடைந்ததற்கு ஏதாவது மறைமுகமான நன்மை கூட இருக்கலாம். உத்தேசம் என்று சொல்வார்கள். நான் இப்படி உத்தேசித்தேன், எண்ணினேன் என்று சொல்வதுண்டு. உத்தேசித்த காரியங்கள் எல்லாம் அப்படியே நடந்துவிட வேண்டும் என்ற கட்டாயமில்லை. அப்படி நினைப்பதால்தான் நமக்கு டென்ஷன் ஏற்படுகிறது. நாம் அமைதியை இழக்கிறோம்

முயற்சி செய்து பார்ப்போம். கிடைத்தால் மகிழ்ச்சி. கிடைக்காவிட்டால் அதுவும் சரிதான் என்ற நினைப்பே நாம் டென்ஷன் இல்லாமல் இருப்பதற்கு உதவும்.

நாம் இப்படிச் செய்ய வேண்டும் எனும் ஓர் உத்தேசம் நம் மனதில் எழுகிறது. அதை இப்படிச் செய்தால் நலம். அப்படிச் செய்யாவிட்டால் நஷ்டம் என்று திட்டமிட ஆரம்பித்து விடுகிறோம். இதுதான் டென்ஷனுக்கு காரணம்.

முயற்சி செய்தோம். அப்புறம் இறைவன் விட்ட வழி என்று மனதை சமாதானப்படுத்திக் கொண்டுவிட்டால், தோல்வி ஒருபோதும் நம்மைத் துயரத்தில் ஆழ்த்தாது.

இன்ஷா அல்லாஹ் என்று முஸ்லிம்கள் சொல்வது இதைத்தான். இறைவன் விருப்பப்படி நடக்கட்டும் என்று விட்டுவிட்டால் நமக்குக் கவலையில்லை. ஆகவேதான் கிருஷ்ணண் கீதையில், கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்கிறார். அதன் உட்பொருள் இதுதான். பலனை மட்டுமே எதிர்பார்த்து, நாம் ஒன்றைச் செய்தால் ஏமாற்றம்தான் ஏற்படுகிறது. Do the Duty that is Divine. Leave unto the God the Rest என்று முனைப்புடன் கடமையாற்றும் போது, சிரத்தையுடன், முழு ஈடுபாட்டுடன் செய்யும் அந்தக் கடமைக்கு நிச்சயம் பலன் கிடைக்கிறது.

ஒரு இளம் தயிர்க்காரி இப்படிக் கற்பனை செய்தாள். இன்று தயிர் விற்ற காசில் கொஞ்சம் மிச்சம் பிடிப்பேன். சிறுகச் சிறுக பணம் சேர்த்து காதுகளுக்கு கம்மல், மூக்குத்தி, வளையல் என அணிந்து எல்லோரும் வியந்து பாராட்டும்படி இப்படி ஒய்யாரமாக நடப்பேன் என்று தலையைத் தலையை ஆட்டினாள். தலையில் இருந்து தயிர்பானை கீழே விழுந்து பானை உடைந்தது. தயிரெல்லாம் தரையில் சிந்தியது. முதலுக்கே மோசம்.

கொஞ்சம் கூட தயிரை விற்காமல் இப்படி அவள் கற்பனையில் மிதந்ததன் விளைவு. ஆகவே தான் கடமையைச் செய், பலனை எதிர்பாராதே. அந்தப் பலனைத் தருபவன் நான் என்று கண்ணன் கூறுகிறார்.

வெற்றி, தேல்வி பற்றி நாம் போடும் மதிப்புத்தான் தவறு. 'Redifine your Success' என்று சொல்வார்கள். நாம் எதை வெற்றி என்று நினைக்கிறோம் என்பதைச் சரியாகப்புரிந்து கொண்டுவிட்டால், வெற்றி பற்றிய நமது மனப்போக்கு தெளிவாக இருக்கும்.

If you have a bird in your hand set it free. If it comes back it is yours. If it does not come back then it is not yours என்றும் ஆங்கிலத்திலும் ஒரு பழமொழி உண்டு. நம் கையில் உள்ள பறவையைப் பறக்கவிட்டால் அது திரும்பி வரும் என்பதில் என்ன நிச்சயம்? திரும்பி வந்தால் மட்டுமே அது நம்முடையது. திரும்ப வராவிட்டால் அது நம்முடையதல்ல என்ற மனோபாவத்தை வளர்த்துக் கொண்டுவிட்டால் மனக்கிலேசத்திற்கு இடமில்லை.

ஒரு சமையல் நிபுணர். அவர் அல்வா கிண்டினார் என்றால், சாப்பிடுபவர்கள் வாயில் அவ்வளவு ருசி. அவரை அல்வா எக்ஸ்பெர்ட் என்றே சொல்வார்கள். ஒருநாள் அவர் கிண்டிய அல்வா சரியாக வரவில்லை. என்ன இன்று அல்வா சரியாக அமையவில்லை என்று கேட்டபோது, அவர் 'கூலாக' பதில் சொல்கிறார். அது அப்படித்தான் ஒருநாள் சொதப்பித்தான் போகும் என்று.

---

**திண்டுக்கலில் புனித ஹஸனைன் மௌலிது ஓதல்,கர்பலா நினைவு நாள்!**

திண்டுக்கல் ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை சார்பில் மறைஞான நகர் எஸ். காஜா நஜ்முத்தீன் ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் இல்லத்தில் புனித ஹஸனைன் ஓதல்,கர்பலா நினைவு நாள் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

கர்பலாவை முன்னிட்டு பள்ளிகளில் மாணவ மாணவியருக்கு கேள்வி–பதில் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டதில் திண்டுக்கல் கிரீன் பார்க் மெட்ரிகுலேசன் பள்ளியில் 45,கிரீன் வேலி பள்ளியில் 45, ஸ்ரீராமபுரம் ஹாஜி முஸ்தபா மெட்ரிகுலேசன் பள்ளியில் 40, பேகம்பூர் அமீருன்னிஸா ஓரியண்டல் மேல்நிலைப்பள்ளியில் 30, மானா. மூனா. கோவிலூர் கொழும்பு சையித் முஹம்மத் ஆலிம் மேல்நிலைப் பள்ளியில் 40 = ஆக 200 மாணவ மாணவியர் கலந்து முதல் பரிசாக ரூ.500 உம், இரண்டாம் பரிசாக ரூ.200 உம், மூன்றாம் பரிசாக ரூ.100 உம், ஆக ஒரு பள்ளிக்கு 1000 ரூபாய் பரிசாக வழங்கப்பட்டது. கலந்து கொண்ட மணவ மாணவியர் அனைவருக்கும் பென்சில் கிட்வழங்கப்பட்டது. நிகழ்வுக்கான ஏற்பாடுகளை எஸ். காஜா நஜ்முத்தீன் ஹக்கிய்யுல் காதிரி அவர்கள் முன்நின்று வழிநடத்த ஏகத்துவ மெய்ஞுஞான சபை நிர்வாகிகள் உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். மௌலிது ஷரீபு முடிந்தபின் கந்தூரி உணவு வழங்கப்பட்டது.

# வஹ்தத்துல் வுஜூதில் மவ்ஜூதாய் சரணடைய நாடுகிறேன்!



**“கோவை ஆலிம்” மௌலவி. அல்ஹாஃபிழ் ஷர்புத்தீன் ஆலிம் ஃபஜீ ஹக்கிய்யுல் காதிரிய். கூத்தாநல்லூர்.**

அரும் பெரும் அருட்செல்வமாய்த் திகழும் சங்கைக்குரிய வாப்பா நாயகம் அவர்களின் அன்புக்குரிய பிள்ளைகளாம் ஆத்ம சகோதரர்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு.

எல்லாம் வல்ல அல்லாஹ் தஆலாவின் பேரருளும் கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரன்பும் என் மீது பொழிந்ததன் சாட்சியாக கடந்த 27.6.2024 ஆம் தேதி வியாழக்கிழமையின் அந்தி மாலைப் பொழுதில் , மஃரிப் தொழுகைக்குப் பிறகு அருள் மிகுந்த திருச்சி பைத்துல் உரஃபா இல்லத்தில், சங்கைக்குரிய ஷைகுநாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள் தங்கள் அருட் கரங்களால் எனக்கு பைஅத் என்னும் அழகிய தீட்சை வழங்கி ஆசீர்வதித்தார்கள். அல்ஹம்து லில்லாஹ். ஹக்கிய்யுல் காதிரிய் என்னும் அடையாளச்சின்னம் என் பெயரோடு இணைந்து கொண்டதன் மூலம், அன்று பிறந்த பாலகன் போல் பரவசமுற்றேன். அல்ம்து லில்லாஹ்.

ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை என்னும் மறைஞானத் தோட்டத்தில், சிறு புல்லாய் இந்தப்பிள்ளை துளிர்விட்டெழுந்துள்ளேன். சங்கைக்குரிய ஷைகுநாயகம் அவர்களின் இரட்சண்யக் கொடியின் நிழலில் இளைப்பாறும் பாக்கியம் பெற்றுள்ளேன்.

கடந்த 2022 மே மாத இறுதியில் இலங்கை சென்று சங்கைக்குரிய ஷைகுநாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் (குத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம்) அவர்களைத் தரிசித்தபோது, நாங்கள் இந்தியா வரும்போது உங்களுக்கு பைஅத் தருகிறோம் என்பதாக அருள்பாலித்தார்கள். தங்களின் அருள் வாக்கை தங்களது அருட்பேரர் சங்கைக்குரிய ஷைகுநாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களின் திருவுருவில் நிறைவேற்றியருளியுள்ளார்கள் என்பதே உண்மை. காலங்கள் மாறலாம், கோலங்கள் மாறலாம், தாற்பரியம் ஒன்றே தத்துவம் ஒன்றே அதில் கூடுதலும் இல்லை குறைதலும் இல்லை மாறுதலும் இல்லை என்பதை எனது அனுபவத்தில் உணர்கிறேன். அதனையே இங்கே பகிர்கிறேன்.

தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா என்னும் மெய்ஞ்ஞானப் பாட்டையில், பெருமைமிக்க ஹக்கிய்யுல் காதிரிய் என்னும் பெருங்குடும்பத்தில் கடைக்குட்டியாய் இணைந்துள்ளது இணையற்ற இன்பமாயுள்ளது.

இக்கணத்தில் எனது தாயாகவும் தந்மையாகவும் ஏகனை அறிந்து அடையப் போதுமான குருவாகவும் விளங்கும் சங்கைக்குரிய ஷைகுநாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களின் அருள் மொழிகளை அமுதமாய்ப் பருகி, அன்னவர்களின்அருட்பார்வையில் தவழ்ந்து எழுந்து வளர்ந்து வாழ்ந்து, இரண்டறக் கலந்த நிலையை எய்திட இக்கணத்தில் இறைஞ்சி மகிழ்கின்றேன்.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அன்னவர்களின் அருமைத் திருக்குடும்பத்தாரான அஹ்லுல் பைத்தினரையும் என் உயிருக்கு மேலாக நேசிக்கிறேன். அதன்பொருட்டால் வஹ்தத்துல் வுஜூதில் மவ்ஜூதாய்ச் சரணடைய எனக்கும் எனது குடும்பத்தி ற்கும் எனது சந்ததிகளுக்குமாக ஏக இறைவா… நீயே அருள்புரிவாயாக! ஆமீன். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

# யாஸீனிய் மௌலவிகள் பேரவை சார்பில்,

# கர்பலா சிறப்பு பயான் நிகழ்ச்சி

திருச்சி ஹள்ரத் தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி (ரலி) தர்ஹா கமிட்டி, திருச்சி மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியில் ஓதிப் பட்டம் பெற்ற யாஸீனிய் மௌலவிகள் பேரவை, மெய்ஞ்ஞான இளைஞரணி ஆகியவை இணைந்து, திருச்சி தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி தர்ஹா வளாகத்தில், **ஸய்யிதுஷ் ஷுஹதா இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தியாக வரலாற்றை நினைவுகூரும் வண்ணம், கர்பலா சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி** நேற்று (28.07.2024) ஞாயிற்றுக்கிழமை அஸருக்குப்பிறகு நடைபெற்றது. தொடர்ந்து 5ஆவது ஆண்டாக நடைபெறும் நிகழ்ச்சிக்கு, ஹள்ரத் தப்லே ஆலம் பாதுஷா நத்ஹர் வலி (ரலி) தர்ஹா தலைமை அறங்காவலர் **அல்ஹாஃபிழ். A. அல்லா பக்ஷ் (எ) முகமது கௌஸ் அவர்கள்** தலைமை தாங்கினார்.

சங்கைமிகு அஹ்லுல் பைத் திருக்குடும்பத்தினர், ஹக்கிய்யத்துல் காதிரிய்யா கலீபாக்கள், ஹள்ரத் ஆலம் பாதுஷா நத்ஹர் வலி (ரலி) தர்ஹா பங்காளிகள் மற்றும் மஹல்லாவாசிகள், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி நாழிர் ஹள்ரத் **மௌலவி N. ஸயீது முஹம்மது ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய் மிஸ்பாஹி அவர்கள்** ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அஸருக்குப்பின், **புனித ஹஸனைன் மௌலிது ஷரீஃப்** மஜ்லிசுடன் நிகழ்ச்சி தொடங்கியது. மஃரிபுக்குப் பின்னர், **ஹள்ரத் தப்லே ஆலம் பாதுஷா நாயகம் (ரலி) அவர்களின் ரவ்ழா ஷரீஃபில், ஜியாரத்** நடைபெற்றது.

அதன்பிறகு நடைபெற்ற சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியின் தொடக்கமாக, தஞ்சாவூர் மாவட்டம் விளாங்குடி, ஜுமுஆ பள்ளிவாசல் இமாம் அஃப்ழளுல் உலமா **மௌலவி. J. ரஹ்மான் ஷா ஆலிம் யாஸீனிய் D.C.E.,** ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் திருமறை வசனங்களை ஓதினார். திருச்சி **மௌலவி. S. சையது இப்ராஹீம் ஆலிம் யாஸீனிய் B.A., D.W.D.,** ஹக்கிய்யுல் காதிரிய், அவர்கள் வஹ்தத்துல் வுஜூத் பாடினார். மதுக்கூர் **கலீபா M. முஸ்தபா ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள், நபிப்புகழ்ப்பா பாடினார். திருமுல்லைவாசல் **சங்கைமிகு ஹஸன் மௌலானா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்,** கர்பலா நினைவுப் பாடலை உருக்கமாகப் பாடினார். சென்னை ஜோஹோ கார்ப்பரேஷன் டிசைனர் **மௌலவி. A.குலாம் காதிர் ஆலிம் யாஸீனிய் B.Com., ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் வரபேற்புரையாற்றினார்.

இந்திய ஏகத்துவ மெய்ஞ்ஞான சபைத் தலைவரும், மறைஞானப்பேழை ஆசியருமான **கலீபா.ஆலிம்புலவர்.S.ஹுஸைன் முஹம்மது ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ** அவர்கள், மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி பேராசிரியர் **மௌலவி. A. முஹம்மது அப்துல்லாஹ் ஆலிம் அல் குத்ஸி** அவர்கள், திருமுல்லைவாசல் **சங்கைமிகு ஸய்யித் M.யாஸீன் மௌலானா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

கூத்தாநல்லூர் ஜாமிஆ அஷ் ஷஜரதுன் தய்யிபா ஃபீ தஃவதுல் இஸ்லாமிய்யா பெண்கள் அறபுக் கல்லூரி நிறுவனர் ‘‘கோவை ஆலிம்’’ அல்ஹாஃபிழ். **மௌலவி. A.K.A.ஷர்ஃபுத்தீன் ஃபைஜீ ஆலிம் ஹக்கிய்யுல் காதிரிய் ஹள்ரத் அவர்கள்,** திருநபியின் திருக்குடும்பமும், செந்நீர் சிந்திய தியாக பூமியும் என்ற தலைப்பிலும், சுன்னத் வல் ஜமாஅத் பேரியக்கத் தலைவரும் மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியின் ஆலோசகருமான அபுல் பயான். அபுத்தலாயில்.அல்ஹாஜ். அல்ஹாஃபிழ். **மௌலவி. Dr.M.ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி ஹள்ரத் அவர்கள்,** அறிவுச் சுரங்கம் அலி (ரலி) – அஹ்லுல் பைத்தின் அங்கம் என்ற தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்கள்.

யாஸீனிய் மௌலவிகள் பேரவை பொருளாளர் **மௌலவி.K.இப்ராஹீம் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் நன்றியுரையாற்றினார். யாஸீனிய் மௌலவிகள் பேரவைத் தலைவர் **மௌலவி. A.கலீல் ரஹ்மான் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில், திருச்சி, திண்டுக்கல், மதுக்கூர், பெரம்பலூர், பாக்கம் கோட்டூர், மதுரை, மேலூர், இராமநாதபுரம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலிருந்து முரீதீன்கள், முஹிப்பீன்கள், உள்ளூர் ஜமாஅத்தினர், திரளாகக் கலந்து கொண்டனர். துஆ ஸலாவத்துடன் நிறைவு பெற்ற நிகழ்ச்சியில் வந்திருந்த அனைவருக்கும் கந்தூரி உணவு விநியோகிக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை யாஸீனிய் மௌலவிகள் பேரவை மற்றும் மெய்ஞ்ஞான இளைஞரணியினர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

தகவல் : **அ.நை.மு. அன்சாரி ஹக்கிய்யுல் காதிரிய்** , திருச்சி.

---

■ *சில சுவடுகள் மனதில் வடுக்களாக இருந்தால்தான்..வாழ்வில் நமக்கு சாதிக்கும் வல்லமை வருகிறது!உங்களுக்கு மதிப்பில்லை என நீங்கள் உணரும் இடத்தில் மௌனமாக இருக்கப் பழகுங்கள். காலப்போக்கில் உங்கள் மௌனம் அதற்கான மதிப்பைத் தரும்.*

**புத்தர்.**

# நல்லாட்சி நாடி நின்ற நாயகர்!

இளங்கவி.அ.நைனார் முஹம்மது அன்சாரி, M.A., MLIS ஹக்கிய்யுல் காதிரிய், திருச்சி.

அண்ணல் நபி ஈரக்குலை
அலிப்புலியார் வீரப்பிள்ளை
ஹுஸைனாரின் வாழ்க்கை சொல்ல வந்தேங்க...
தியாகத்துக்கு ஈடு இணை இல்லேங்க...
அலியாரைக் கொன்ற வஞ்சம்
ஹஸனாரைக் கொன்ற நஞ்சு
பலிகேட்டு கர்பலாவில் சூழ்ந்ததே
வழிகாட்டும் நட்சத்திரம் வீழ்ந்ததே (அண்ணல் நபி)

நாயகத்தின் தனிப்பாசம்
கழுத்தெல்லாம் நபி முத்தம்
பாத்திமா மடிவளர்ந்த மணிமுத்தாம்
நல்லாட்சி நாடிநின்ற நாயகர்...
நமக்காக உயிர்நீத்த தூயவர்...

மதீனாவில் தங்காமல்
மக்காவில் தேங்காமல்
கூஃபாவைத் தேடித் தாங்கள் போனதேன்?

நாயகத்தை ஏமாற்றி
அலியாருக்கு நஞ்சூட்டி
துரோகம் செய்த வாக்கை நாடிப் போனதேன்?

இரக்க மேதும் இல்லாமல்
இறைவன் மீதும் அஞ்சாமல்
கண்ணே உம்மைக் கொன்றநிலம் கர்பலா
நினைத்தாலே நெஞ்சமெல்லாம் புண்ணாகும்
கண்ணீராறு பெருக்கெடுக்கும் மண்ணாகும் (அண்ணல் நபி)

பாலுக்கு அழுதபிள்ளை
தண்ணீரும் பருகவில்லை
போர்மரபை மதித்திடாத மதிமூடரே
    கண்ணெதிரே நீரோடை
    மண்ணதிரப் போராட
    குழந்தைக்குத் நீர்புகட்ட நபிப் பேரரே

ஊருக்கு உழைத்த குடும்பம்
உதவிக்கு அழைத்தபோதும்
தாகம் கூடத் தீர்த்திடாத வஞ்சகர்
நாடாளக் கொடுத்ததென்ன முஆவியா
எஜீதுபடை விடுத்ததென்ன பார்த்தியா (அண்ணல் நபி)

வாளேந்திச் சென்றநல்லோர்
ஷஹீதாகிப் போனார்கள்
ஹுஸைனாரும் களமிறங்கி நின்றார்கள்!
    புராத்தில் நீர்பருக
    புகுந்த ஹுஸைனரின்
    திருக்கழுத்தில் அம்பெய்து கொன்றார்கள்!

திருநபியின் குலவிளக்கு
தியாகத்தின் திருவிளக்கு
இன்றும் என்றும் அழிந்திடாத அற்புதம்
ஹுஸைனாரின் தியாகமெண்ணிப் போற்றுவோம்!
வஞ்சகரின் வஹ்ஹாபிசம் தூற்றுவோம்!! (அண்ணல் நபி)

பாடல் : –
மெட்டு : எள்ளு வய பூக்கலையே

---

*எங்களுக்கு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டு வந்த இஸ்லாம் மார்க்கமே போதும்.*

*இப்னு தைமிய்யாவின் வஹ்ஹாபி மார்க்கம் எங்களுக்குத் தேவையில்லை. வஹ்ஹாபிகளை இனங்கண்டு அவர்களை எதிர்ப்பதும் நம் தீவிரப் பணியாக இருக்க வேண்டும்.*

*– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் ––*

# கர்பலாவின் கொடுங்காட்சி...
# நம் கண்களிலே நீர்வீழ்ச்சி!

பாடல் : மௌலவி. பீர் முஹம்மது யாஸீனிய்
ஹக்கிய்யுல் காதிரிய், B.B.A., திருச்சி.
மெட்டு : மக்கமா நகர் பிறந்தீரே...

ஜனநாயகம் செழித்தோங்க
உயிர்த்தியாகம் செய்தீரே !
யா ஷஹீதே ! யா ஹுஸைனே !
வீர தியாகத்தின் பிறப்பிடமே! (ஜனநாயகம்)

அலியாரின் அருந்தவமே ஹசனாரின் உடன்பிறப்பே
ஃபாத்திமா நாயகியின் பேரொளியே ஹுஸைனாரே
நபிநாயகம் நமக்களித்த திருக்குடும்பத்தை பற்றிக்கொள்வோம் (ஜனநாயகம்)

இப்ராஹிம் நபி வாளை இயங்காமல் செய்தோனே !
இரசூல் நபிப் பேரர் ஹுசைனாரை மறந்தாயோ.
இஸ்மாயில் நபிக்குத் தந்த குர்பானை நிறைவு செய்தாய்.
யா ஷஹீதே ! யா ஹுஸைனே ! வீர தியாகத்தின் பிறப்பிடமே! (ஜனநாயகம்)

காப்பாற்றிட முடியாதா? நபியே தங்கள் பேரர்களை
உம்மத்தின் பரிந்துரைக்கே உம்மீ நபிய்யின் துஆ.
என் மகளே ஃபாத்திமத்தே என்றார்கள் சாந்த நபி.
யா ஷஹீதே ! யா ஹுஸைனே ! வீர தியாகத்தின் பிறப்பிடமே! (ஜனநாயகம்)
பகையோரின் தாகத்தினை பதுறுப் போரில் தீர்த்தீரே.
தண்ணீரே தாராமல் தங்கள் குடும்பத்தை வதைத்தாரே.
நீதி நேர்மை நியாயம் எல்லாம் கர்பலாவில் புதைந்ததுவே.
யா ஷஹீதே ! யா ஹுஸைனே ! வீர தியாகத்தின் பிறப்பிடமே! ஜனநாயகம்)

ஃபிர்அவ்னும் நம்ரூதும் அபூ ஜஹ்லும் அபூலஹபும்
தோற்றார் யஜீதனிடம் கொடுங்கோலன் எனும் பட்டம்.
தீய சொற்களின் முதல் இடத்தில் யஜீதெனும் இழிசொல்லே.
யா ஷஹீதே ! யா ஹுஸைனே ! வீர தியாகத்தின் பிறப்பிடமே! (ஜனநாயகம்)

இழிவான யஜீதின் கீழ் கொடுங்கோலர்களின் ஆட்சி
கர்பலாவின் கொடுங்காட்சி நம் கண்களில் நீர் வீழ்ச்சி
மறந்தோமே வன்மங்களை மறைத்தோமே உண்மைகளை
யா ஷஹீதே ! யா ஹுஸைனே ! வீர தியாகத்தின் பிறப்பிடமே! (ஜனநாயகம்)



# மதுரஸா
# நன்கொடை



## திண்டுக்கல்

1. மேலத்திருப்பூந்துருந்தி மர்ஹூமா சல்மா கனி அவர்களின் 20-ஆம் நாள் பாத்திஹாவை முன்னிட்டு மஃபிரத்திற்காக - துஆ செய்ய ரூ. 500/-ம்,

2. மேலத்திருப்பூந்துருத்தி முஹம்மது இல்யாஸ் அவர்கள் நல்லபடியாக வீடுகட்ட துஆ செய்ய ரூ. 500/-ம்,

3. திண்டுக்கல் M. நதீர் S/o. முஹம்மது சதக்கததுல்லா நிய்யத்படி மாதாந்திர நன்கொடை ஜுலை 1600 + ஆகஸ்ட் ரூ. 1600/-ம்,

4. காரைக்கால் R.A. அப்துல் பாருக் பாத்திமா கடன்கள் விரைவில் நீங்கி குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 500/-ம்,

5. மதுரை S. சாகுல் ஹமீது துஆ செய்ய மாதாந்திர சதக்கா ரூ. 1000/-ம்,

6. பேராவூரணி ரோஜா பானு அவர்களின் மருமகன் அமீர்சலாம் பிறந்த நாளை முன்னிட்டு ஷைகு நாயகம் அவர்களின் கிருபையால் சிறப்புடன் வாழ துஆ செய்ய ரூ. 1000/-ம்,

7. திருச்சி CAMP சிங்கப்பூர் சையது இஸ்மாயில் S/o. சுல்தான் இப்ராஹிம் நல்ல வேலை கிடைக்க நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 2000/-ம்,

8. திண்டுக்கல் R. நாதிர் S/o. S.P. ராஜா முஹம்மது பள்ளிக்கு தவறாமல் சென்று நன்றாக படிக்க துஆ செய்ய ரூ. 501/-ம்,

9. சென்னை ஹசீனா D/o. N. அப்துல் வாஹித் பாஷா துஆ செய்ய காணிக்கையாக ரூ. 3000/-ம்,

10. நீடூர் ஹாஜா நிஜாமுதீன் துஆ செய்ய ரூ. 500/-ம்,

11. திண்டுக்கல் Er. A. அப்துல் வஹாப் உண்டியல் எண் 76- சேமிப்பு காணிக்கையாக ரூ. 4560/-ம்,

12. சென்னை S. சர்மிளா உசேன் சதக்கா ரூ. 1000/-ம், உணவுக்காக அகீகா ரூ. 500/-ம்,

13. திண்டுக்கல் பாத்திமா பஞ்சர் கடை நாகூர் மீரான் உண்டியல் எண் 73 சேமிப்பு ரூ. 2000/-ம் உண்டியல் எண் 74 சேமிப்பு ரூ. 2200/-ம்,

14. புத்தூர் சஹாபுதீன் துஆ செய்ய ரூ. 750/-ம்,

15. காரைக்கால் நல்லம்பல் **H.**நஸ்ரீன் பானு அவர்கள் **A.** அப்துல்லா **H.** அஃப்ரின் இவர்களின் திருமணம் சிறப்பாக நடக்க நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 2000/-ம்,

16. மடத்துக்குளம் **S.P.** சேக் அப்துல்லா சாலிஹா பீவீ துஆ செய்ய மாதாந்திர நன்கொடை ரூ. 700/-ம்,

17. கம்பம் **M.A.** முஹம்மது ஆஷிக் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

18. பேராவூரணி ரோஜா பானு இவர்களின் தங்கை கணவர் எவ்வித பிரச்சனை இல்லாமல் கடை திறக்க நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 500/-ம்,

19. திண்டுக்கல் காந்தி கிராமம் **N.** பத்தூல் மற்றும் குடும்பம் சதக்கா ரூ. 500/-ம்,

20. திண்டுக்கல் உ.மு.கா. சையது மன்சூர் அலி அவர்களின் மகள் மொஹைதீன் சபுரா தன் பிறந்த நாளை முன்னிட்டு துஆ செய்ய காலை சிறப்பு உணவுக்காக ரூ. 10000/-ம்,

21. நாகூர் **A.** ஹஸன் முஹம்மது ஹாஜத்துக்கள் அனைத்தும் நிறைவேற துஆ செய்ய ரூ. 1000/-ம்,

22. கிளியனூர் முஹம்மது ஃபஹிம் உடல் ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டி துஆ செய்ய ரூ. 500/

23. சென்னை சனோபர் நிஷா உணவுக்காக சதக்கா ரூ. 500/-ம்,

24. நாகூர் மர்ஹூமா ஹாஜியா உம்மா ஹபீபா அவர்களின் 6 மாத பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய சிறப்பு உணவுக்காக ரூ. 10000/-ம்,

25.சோழிங்கநல்லூர் **N.** ஹைருன் னிஸா நிய்யத்து ரூ. 500/-ம்,

26. புத்தூர் சஹாபுதீன் துஆ செய்ய ரூ. 500/-ம்,

27. காரைக்குடி ஃபாத்திமுத்து ஸஹ்ரா நிய்யத்து ரூ. 2000/-ம்,

28.ஈரோடு **M.** ஜரினா பேகம் அவர்கள் நாட்டங்கள் நிறைவேற பதுறு சஹாபாக்கள் மௌலிது ஓதி துஆ செய்ய ரூ. 2000/-ம்,

29. **SIS. SHUNNIE (JAMAICA)** குடும்பத்தினர் அனைவருக்கும் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

30. உத்தமபளையம **M.** அஷ்ரப் அலி நிய்யத்து துஆ செய்ய உணவுக்காக ரூ. 1000/-ம்,

31. முஹம்மது பந்தர்-குர்ஷித் பேகம் அவர்களின் உடல்நலம் பரிபூரண சுகமடைய வேண்டி துஆ செய்ய ரூ. 5000/-ம்,

**மதுக்கூர்**

1. முகம்மது நளீஸ் சபீனா சப்ரீன், மகனார் 3 வது பிறந்த நாளை முன்னிட்டு பிள்ளையின் நல் வாழ்வுக்கு துவாச் செய்ய நன்கொடை ரூ. 1000/-ம்,

2. **O.P.U.A.** பஷீர் அஹமது தம்முடைய பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு துவாச் செய்ய நன்கொடை ரூ. 1500/–ம்,

3. **M.** ஹாஜா மைதீன் (நாங்குடி) மதரசா மேலான நல்வாழ்வுக்கு துவாச் செய்ய நன்கொடையாக ரூ. 500/–ம்,

4. **O.P.U.A.** பஷீர் அஹமது தம்முடைய பிள்ளைகளின் மேலான நல்வாழ்வுக்கு துவாச் செய்ய மாத சந்தா நன்கொடையாக ரூ. 1500/–ம்,

5. கவிஞர் அப்துல் நாசர் மேலான நல்வாழ்வுக்கு துவாச் செய்ய உண்டியல் சேர்த்த வகையில் ரூ. 4330/–ம்,

6. கசனபர் அலி பூரண சுகத்திற்கு துவாச் செய்ய மதரசா நன்கொடை ரூ. 1000/–ம்,

7. ஹதீஜா இவர்களின் சிறப்பான நல்வாழ்வுக்கு துவாச் செய்ய ரூ. 500/

8. முபாரக் நிஷா இவர்களின் சிறப்பான நல்வாழ்வுக்கு துவாச் செய்ய ரூ. 500/–ம்,

9. **O.P.U.A.** ஹாஜா மைதீன் பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு துவாச் செய்ய ரூ. 500/–ம்,

10. **N.** பர்ஹான் ஹாஜத்து நிறைவேறியதை முன்னிட்டு துவாச் செய்ய நன்கொடை ரூ. 2000/–ம்,

11. **S.** வஹிதா பீவி பூரண சுகத்துடன் நீண்ட ஆயுளுக்கு துவாச் செய்ய ரூ. 2000/–ம்,

12. **O.P.U.A.** நத்தர்ஷா மன நிறைவுக்கு துவாச்செய்ய நன்கொடை ரூ. 1000/–ம்,

14.கைருனிசா கையூம் இவர்களின் மேலான நல்வாழ்வுக்கு துவாச் செய்ய உண்டியல் மூலமாக சேர்த்து ரூ. 9000/–ம்,

15.கைருனிஷா கையூம் இவர்களின் மேலான நல்வாழ்வுக்கு துவாச் செய்ய ரூ. 3600/–ம்,

16.பாத்திமா நஜாஹா நல்வாழ்வுக்கு துவாச் செய்ய மதரசா நன்கொடை ரூ. 1000/–ம்,

17. **O.P.** ஹாஜா அலாவுதீன் முகமது தோல் வசூல் ரூ. 3125/–ம்,

18. **S.N.S.** ஹாஜா மகன் சேக்முகம்மது உயர்ந்த பதவியில் நல்ல சம்பளம் கிடைக்க துவாச் செய்ய ரூ. 500/–ம்,

19. **B.** அப்துல் ஹக்கீம் உயர்வான வேலை கிடைத்து நிறைந்த சம்பளம் கிடைக்க துவாச் செய்ய ரூ. 500/–ம்,

20. கணவனும் மனைவியும் ஒத்துமையாக வாழ துவாச் செய்ய ரூ. 500/–ம்,

**வழங்கினர். வழங்கியவர் களுக்கு வாப்பா நாயகம் அவர்களின் பொருட்டால் அல்லாஹ் அவர்களின் நாட்டங்களை நிறைவேற்றியருள் வானாக1**








28.7.2024 அன்று யாஸீனிய் மௌலவிகள் பேரவை சார்பில் திருச்சி தப்லே ஆலம் பாதுஷா (ரலி) தர்ஹாவில் நடைபெற்ற புனித கர்பலா விழாவில் **சங்கைமிகு யாஸீன் மௌலானா, ஜமாலி ஹள்ரத், கோவை ஷர்புத்தீன் ஆலிம்** ஆகியோர் உரை நிகழ்த்திய காட்சிகள்

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul


## தர்ஜுமத்துல் குர்ஆன் – மஅத் தஃப்ஸீரி – வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு – விளக்க உரை – தெளிவுரை – ஆன்மீக விளக்கக் குறிப்புகளுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 – (கொரியர் செலவு தனி)




## அரபு – தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் – மாணவர்கள் – ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165


Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee